# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 3411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, புரட்டாதி 14 உ. (30-9-73) ஞாயிறு ரமழான் ஆகிர் 2 — புத்தகம் 27 இதழ் 5


# சட்டமறுப்பு

# நாளை மறுநாள் ஆரம்பம்!

## மாவையில் ஒருநாள் உண்ணாவிரதம்!!

தமிழர் கூட்டணியின் சட்டமறுப்பு இயக்கம் ஏற்கெனவே தீர்மானித்தபடி நாளை மறுநாள் (அக்டோபர் 2ந் திகதி) அண்ணல் காந்தி அவதரித்த புனித நாளில் – தமிழ் ஈழத்தில் ஆரம்பமாகிறது.

25-6-72ல் கோப்பாயில் நடைபெற்ற தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய தமிழினத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மீண்டும் நிலைநாட்டுவது — சுயநிர்ணய அடிப்படையில் தமிழினத்தின் அரசியல் பொருளாதார சமூக கலாச்சார வாழ்வை அமைத்துக்கொள்வது — என்கின்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அக்டோபர் 2ம் நாள் சாத்விக சட்டமறுப்பில்இறங்குவதென 23-9-73ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு தீர்மானித்தது.

இதேவேளையில் கடந்த ஓராண்டாக காங்கேசன்துறை இடைத்


(7-ம் பக்கம் பார்க்க)

## சட்டமறுப்பு இயக்கக்குழு!

அக்டோபர்—இரண்டு சட்டமறுப்பு இயக்கத்தையொட்டிய வேண்டிய நடவடிக்கைகளை யெடுப்பதற்கு ஏழு பேர்கொண்ட அதிகாரக்குழு வொன்றை தமிழர் கூட்டணி அமைத்துள்ளது. அக்குழுவில் இடம்பெறுவோர் வருமாறு:-

திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம், கு. நேசையா, சி. கதிரவேற்பிள்ளை, சு. நடராசா, மு. மாணிக்கம், தா. சங்கரப்பிள்ளை.

## பிரதமா அமைச்சிலிருந்து தனிச் சிங்களக் கடிதம்



தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு கையொப்பத்துடன் கூடிய உத்தியோக ரீதியான மறுமொழி அரசிடமிருந்து தமக்கு தமிழிலேயே கிடைத்திட வேண்டுமென்று தமிழ் மக்கள் கோரி வருகிறார்கள். ஆனல் அரசோ சிங்களத்தில் உத்தியோக ரீதியான கையொப்பத்துடன் கூடிய மறுமொழியும், தமிழில் அதன் மொழி பெயர்ப்பும் அனுப்புவதே தன் கொள்கையென்று கூறிவருகிறது.—

அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தருவதாக கூறும் இந்த அற்ப சலுகை கூட நடைமுறையில் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டு அரசிடமிருந்து தனிச்சிங்களத்தில் தமிழ் மக்களுக்கு கடிதங்கள் கிடைத்துவருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான ஒரு பத்திரிகையில், தமிழ்க் கடிதங்களுக்கு சிங்களப் பதிலுடன் தமிழில் அதன் மொழி பெயர்ப்பும் சேர்த்து அனுப்பப்படவேண்டும் என்று பிரதமர் உத்தர விட்டிருப்பதாக முன் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் ஒரு செய்தி வெளியிடப் பட்டிருந்தது.

ஆனல் இதோ— பிரதமருடைய அமைச்சிலிருந்தே தமிழில் கடிதம் எழுதிய ஒருவருக்குமொழிபெயர்ப்புக்கூட இன்றி அனுப்பப்பட்ட தனிச் சிங்களக் கடிதத்தின் 'போட்டோஸ்ராட்' புகைப்படம்!

இதற்குப் பிரதமர் என்ன கூறப்போகிறர்—

(விபரம் 2-ம் பக்கம் பார்க்க)

## சட்டத்தை ஏன் நாம் மீறுகிறோம்?

தமிழர் கூட்டணி அக்டோபர் 2ம் நாள் தொடங்கவிருக்கும் தபால் சட்ட மறுப்பில் ஈடுபடும் தொண்டர்கள் சட்ட மறுப்பில் தாம் ஈடுபடுவதற்கான காரணங்களை விளக்கும் கீழ்வரும் கடிதத்தை பிரதமருக்கு அனுப்பிவைப்பார்கள்:

கௌரவ பிரதமர் அவர்களே!

இலங்கையில் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இரு வேறு இனங்களாகி வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர். ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்த இரண்டு இனங்களும் முழுநாடும் நிருவாக வசதிக்காக ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன:

மக்களுக்கு அதிகாரத்தை மாற்றுவதற்கென்று ஆங்கிலேயர் புகுத்திய சோல்பரி அரசியல் அமைப்பு 1947-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அது சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டது.

1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அது சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்டது.

சோல்பரி அரசியல் அமைப்புக்குப் பதிலாக சிங்கள தேசிய இனம், தனது பெரும்பான்மை பலத்தினுல் தமிழ்த் தேசிய இனத்தின்மீது திணித்த குடியரசு அரசியல் அமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்க மறுத்து விட்டனர்.

அரசியல் அமைப்பைத் திருத்தி நாட்டில் ஒற்றுமையைப் பாதுகாக்க உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு தமிழ் இனத்தின் குறைந்த பட்ச கோரிக்கை

(5-ம் பக்கம் பார்க்க)

## சுயாட்சிக் கோரிக்கைக்கு இ.தொ.கா. எதிரானதல்ல!

### தினகரனின் பொய்ச் செய்திக்கு தொண்டமான் பலத்த மறுப்பு!

தமிழர் கூட்டணியைப் பிளவுபடுத்தவும், தமிழர் சுயாட்சிக்கோரிக்கையை பலவீனப்படுத்தவும் திட்டமிட்டு படுகீழ்த்தரமானதும் பொய்யானதும் கயமை கலந்ததுமான செய்திகளை கட்டவிழ்த்து விட்டுவரும் தினகரனுக்கு இ. தொ. கா. தலைவர் திரு. எஸ், தொண்டமான் சரியான சவுக்கடி கொடுத்துள்ளார்;

தமிழரசுக்கட்சியின் 12வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சுயாட்சிக்கோரிக்கையை தாம் எதிர்ப்பதாக 23-9-73 தினகரனில் வெளியிடப்பட்டிருந்த முன்பக்கச்செய்தி முற்றிலும் பொய்யானது என்று திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

திரு: தொண்டமான் 25-9-73ல் தினகரன் ஆசிரியருக்கு இதுசம்பந்தமாக தமது மறுப்பை அனுப்பி இருந்தார். ஆனல் தினகரனே திரு. தொண்டமானின் மறுப்பை இருட்டடிப்பு செய்துவிட்டது.

தினகரனல் இருட்டடிப்பு செய்யப்பட்ட திரு. தொண்டமானின் மறுப்புக் கடிதம் வருமாறு:-

(5-ம் பக்கம் பார்க்க)

## தீண்டாமைக்கும் வேட்டுவைத்து வருகிறது உண்ணாவிரத இயக்கம்!

### உண்ணாவிரதம் இன்று 20வது நாள்!

தமிழ் இளைஞர் பேரவையின் ஐம்பது நாள் உண்ணாவிரதப்போராட்டம் இன்று (30-9-73) 20வது நாளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று மாலை—உடுப்பிட்டித் தொகுதியில் உண்ணாவிரதம் முடிவுறும் அதே, வேளையில் 20வது நாளாக, இன்று மாலை 6 மணிக்கு காங்கேசன் துறைத்தொகுதியில் ஆரம்பமாகிறது.

இவ்வாரம் நடைபெறவுள்ள உண்ணாவிரத போராட்டம் பற்றிய விபரம் வருமாறு:-

30-9-73 முதல்
3-10-73 வரை
—காங்கேசன் துறை

3-10-73 முதல்
5-10-73 வரை
—நல்லூர்;

5-10-73 முதல்
7-10-73 வரை
—மட்டக்களப்பு

### சமபந்தி போசனம் மூலம் சாதீயம் தகர்க்கப்படுகிறது!

தமிழ் இளைஞர் பேரவை நடத்திவரும் ஐம்பது நாள் உண்ணாவிரத இயக்கம் தமிழ் ஈழத்தின் கிராமப்புற மக்களிடையே இன எழுச்சியையும் ஒருமைப்பாட்டையும், புதிய உத்வேகத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துவருவது மட்டுமன்றி தீண்டாமைக்கும், சாதிபேதத்துக்கும் வேட்டு வைத்து, சமதர்ம சமுதாயமாக தமிழர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பியும் வருகிறது.

உண்ணாவிரதம் முடிவுறும் நேரத்தில்—பல இடங்களிலும் சமபந்தி போசனம் நடைபெற்று வருவதால் தீண்டாமை சுக்குநூறுக்கப்பட்டுவருகிறது. புத்தூர், அராலி, காரைநகர் போன்ற இடங்களில் நடைபெற்ற சமபந்தி போசனங்கள் சாதியத்தை தமிழ் மக்கள் மத்தியிலிருந்து விரட்டியடித்திட துணை செய்வதாயமைகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

### தமிழ் தொழிலாளியை அடித்துக் கொன்றனர் பொலீசார்!

ஆனைகிரனேயாசின்னஉப்புராசி தோட்டத்தைச் சேர்ந்த அ. சுப்பிரமணியம்எனும் ஐந்து பிள்ளைக்குத் தகப்பனை தமிழ்த் தொழிலாளி ஒருவர், இராகலை பொலீசாரினல் கைதுசெய்யப்பட்டு பொலீஸ் ஸ்டேசனுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து மிருகத்தனமாக அடித்துக் கொல்லப்பட்டார்.

பொலீசாரின் வெறிக்கு பலியான தொழிலாளி சுப்பிரமணியம் அவர்களின் குடும்பத்தினருக்கு பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களுடன் சேர்ந்து நாமும் நமது அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# தனித் தமிழில் கடிதம் எழுதியவருக்கு தனிச் சிங்களத்தில் பதில்!

## பிரதமருடைய அமைச்சிலிருந்தே தமிழுரிமை மறுக்கப்படுகிறது!

## டாக்டர் ஒருவருக்கு நேர்ந்த அனுபவம்!

**எஜமான் நிலையிலிருந்து ஆதிக்கம் புரியும் ஒருவன் தட்டுத்தடுமாறி (கேலிக்காகக்கூட இருக்கலாம்) எப்போதாவது அடிமையின மொழியில ஒரு சொல் பேசி விட்டால்— அதற்காக அவனை ஏற்றிப்போற்றி வரவேற்று தனது எஜமானனுக்கு துதிபாட முனைவது கடைந்தெடுத்த அடிமைத்தனமாகும்.**

**இத்தகைய அடிமைத்தனத்தில் மூழ்கி—ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி யென்ற முறையில் திருமதி. பண்டாரநாயகா தமிழ்ப்பகுதியில் யாரோ ஒருவருக்கு தனித்தமிழில் கடிதம் எழுதி விட்டாரென்பதற்காக — அவரைப் பாராட்டி இரண்டுபந்திகள் ஆசிரியத்தலையங்கம் தீட்டி துதிபாடியிருக்கிறது — 29. 8. 73ல் 'ஈழநாடு!**

**ஆனல் நாளிலும் பொழுதிலும் பிரதமரிடமிருந்தும்—ஏனைய அமைச்சுக்கள் அரசாங்க திணைக்களங்களிலிருந்தும்—தமிழ் மக்களுக்கு தனிச்சிங்களக் கடிதங்கள் சென்றுகொண்டிருக்கின்றன. இதனல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் சாதாரண தமிழ்க் குடிமக்கள்.**

**இதோ நமக்கு வந்த ஓர் கடிதம் கொக்குவிலைச் சேர்ந்த டாக்டர் எஸ். இராசரத்தினம் அவர்கள் தனிச்சிங்களக் கடிதத்தினல் தாம் அடையும் தொல்லைகளை இதில் விவரிக்கிறர். இப்படி நாள் தோறும் அரசின் சிங்கள வெறிக்கு எத்தனை தமிழர்கள் பலியாகி கஷ்டமடைகிறர்களோ? குமார சூரியரும், அரசுக்கு துதிபாடும் ஏனைய எடுபிடிகளும் இதற்கு என்ன கூறப்போகிறர்கள்?**

**—ஆர்**

சுகாதாரப் பகுதித்தலைவரை எனக்குத்தேவையான ஒருவைத்தியத்துக்கு அந்நிய செலவாணி அளித்தல் தேவையே என்று ஆதாரப் பத்திரம் கொடுக்கும்படி மீண்டும் மீண்டும் கேட்டும் மறுமொழியே கிடையாததால் பிரதமரை 6 3 73 திகதியிட்ட கடித மூலம் அணுகினேன் 38711 இலக்கமும் 15.3.73 திகதியும அலங்கரிக்க ஒரு தனிச சிங்களக் கடிதம் கிடைத்தது. (படப்பிரதி இத்துடன்) அது நூற்றுக்கு நூறு சிங்கள மாயிருந்ததால் (கடிதத்தலைகளே கலப்பில்லாச்சிங்களம்) பிரதமரிடமிருந்துதான் இவ்விடை வந்தது என்ற பரிதாபத்துக்கு இடமாய் ஊகித்தறிய வேண்டிக்கிடந்தது.

25.4 73 அன்று ஒன்றுமே புரியவில்லை அம்மா என்று விளக்கம் கேட்டெழுதினேன். மறுமொழி காணது 17.5.73 அன்று பின்பும் கவலை தெரிவித்து பதிவுக்கடிதம் அனுப்பினேன். இன்று வரை ஏதுமே கிடைக்க வில்லை.

பேசுவதைச் செயலிலும் செய்யும் பெரும் கண்ணியமுள்ளவர் மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா. எனவே அவர்களுக்கு இது முறையாகுமோ என்றுமுறையிட்டேன். அவர் மறுமொழி தந்தார். தான் கடிதங்களை கனம் குமாரசூரியரவர்களுக்கு ஆவன செய்ய அனுப்புவதாகக் குறித்திருந்தார் தனிச்சிங்களக் கடிதங்கள் இரண்டின் படங்களை முறைப்பாட்டில் அணைத்திருந்தேன், (ஒன்று பிரதமரிடமிருந்து வந்த கடிதம்; மற்றது தபால் பகுதியிலிருந்து கிடைத்த முழுச் சிங்களக்கடிதம்) அதனற்போலும் தபால் மந்திரிக்கு அனுப்பப் பட்டது.

திரு. குமாரசூரியரவர்களும் உடன் மறுமொழி தந்தார்கள். சிங்களக் கடிதங்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு சேர்த்து அனுப்புவதே அரசின் கொள்கை என்றும் தவறு எங்குநேர்ந்ததென்று அறிந்து நிவர்த்திப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். 2.4.73 அன்று இக் கடிதம் எனக்குக்கிடைத்தது. ஆனல் தமிழ் ஆக்கங்கள் இன்னும் வந்தபாடே இல்லை!

15.5.73 அன்று இன்னுமோர் சிங்களக்கடிதத்தின் ''போட்டோஸ்ராட்'' கொப்பி அனுப்பி முந்திய வைக்கும் நீதி கிடைக்கவில்லை என நினைப்பூட்டினேன். இது வழியில் நெல்லுக்களவு போன முறைப்பாட்டுக்கு புகையிரதப் பகுதியிலிருந்து கிடைத்த மறுமொழி, திரு. குமார சூரியரவர்களின் காரியதரிசியிடமிருந்து 23.5.73 திகதியிட்ட கடிதம் கிடைத்தது. தனது மந்திரி தகுதியான நடவடிக்கை எடுப்பதாக அதில் குறிப்பிட்டிருந்தார் ஒன்றும் தெளிவாக வில்லையே இன்னும் என்று பின்பும் இரு கடிதங்கள் எழுதி காரியதரிசிக்கு நினைவூட்டினேன் இதுகாறும் பயன் கிடைக்க வில்லை.

தமிழனுக்கு வெளி நாட்டுக்கு சிகிச்சைக்கு செல்ல பாதை அடைபட்டிருக்கிறது. இல்லை! ஆம்! என்ற மறுமொழிகளே இல்லை. தமிழனின் நெல்லு களவாடப்பட்டால் சிங்களக்கடிதம் தந்து வேறு அடி எடுத்து வைக்க முடியாது பாதை சிக்கலாக்கப்படும்!

எங்கள் தபால் அமைச்சர் நல்லவர். கண்ணிய முள்ளவர். தகுதிவாய்ந்தவர். அரசின் மீது நம்பிக்கையை இன்னும் இழக்காதிருக்கிறர். அது தமிழனின் துர்அதிர்ஷ்டமே. தமிழ் மொழி பெயர்ப்பு போன்ற புற்சலுகையில் தடுக்கப்பட்டு நிற்கும் அரசு புளியம் வேரில் தடக்குப்படாது எப்படிச் செல்ல முடியும்?

தமிழாக்கம் தருவது தமிழருக்கு இரங்கித் தந்த ஒரு மிகச் சிறிய புற்சலுகை. சொல்லில் சொல்லி, செயலில் செய்யாதிருப்பது அருவருக்கக் கூடியசெயலே. ஏன் நிமிர்ந்து 'சிங்களம் தான் பாஷை அதில்தான் செயலாற்றுவோம்' என்று சொல்ல முடியாது? அச் செய்கை எங்களை நேர்முகமாகவே புறக்கணித்து விடும்? மறைமுகமாக இப்போ புறக்கணிக்கப்படுகிறேம்.

யார் இன ஒற்றுமையைக் குலைப்பது? யார் அரசியல் ஒற்றுமையைக் கலைப்பது? தமிழர்களா? அரச அதிகாரிகளா? சிங்கள 'டி. ஆர். ஓ' தமிழ் 'டி, ஆர், ஓ' என்று தொடங்கிய அன்றே 'நீயாரோ நான் யாரோ' [illegible] [illegible] முளைவிட்டது! அன்று [illegible] பிரிக்கப்பட்டு வருகிறேம். நாங்கள் பிரியவில்லை?

நான் கட்சி சார்பற்றவன். இன ஒற்றுமையைப் பெரிதும் விரும்புபவன். இவ்வொற்றுமை குலைவதைப் பார்க்க பெரிதும் மனம் வருந்துகிறது. இவ்வொற்றுமை இல்லாது இச்சிறு இலங்கை எப்படி முன்னேற முடியும்? ஒற்றுமையைக் குலைப்பது ஆளும்கட்சியினரே. குழப்பம் நேர்ந்தால் அவர்களே முழுப்பொறுப்பும்:

ஏற்கவேண்டியவர்கள்

சிங்களச் சினேகிதர் அறிய வேண்டி டெயிலி நியூஸ் ஆடி ஆறுந்திகதிப்பத்திரிகையில் இதையே குறித்திருக்கிறேன். சிங்கள, தமிழ் இளைஞர்கள் ஒற்றுமையாய் வாழ வழி வகுக்காது துடிக்கத்துடிக்க இறக்க வழி வகுப்பது நல்லதுதானு? ஞாயமாகுமா? எங்கள் போர் வீரர் எப்படி பட்ட மனப்பான்மை உடையோரென்று சென்ற கலவரத்தின் பொழுது தெரியவந்தது. அந்த அழகிக்கு கதிர்காமத்தில் நடந்தது எவர் மனதை உருக்காது? கண்களை நீர் சொட்டச்செய்யாது?

கட்சி சார்பற்ற எங்கள் நம்பிக்கைக்கும், மரியாதைக்கும் பாத்திரமான கண்ணியமுள்ள தமிழ்த்தலைவர் மாணிக்கவாசகரின் உள்ளக்குமுறுகையை அன்று சரஸ்வதி மண்டபத்தில் கேட்டோம். (Daily Mirror 8-8-73)

ஏன் தமிழ் தலைவர்கள், கட்சி சார்பற்று இருப்பவர்கள், சிங்களச்சகோதரரிடையில் நல் மதிப்புள்ளவர்கள் நியாய துரந்தரர், இளைப்பாறிய நீதி அரசர் மாணிக்கவாசகர் போல் தங்கள் உள்ளக்கிடக்கைகளை எடுத்துக்கூறலாகாது?

ஒரு தியாகராசாவும் ஒரு அருளம்பலமும் எப்படித் தமிழராகலாம்? தங்கள் கட்சிக் கற்பினை மீறியபொழுதே தர்மத்தைக் கைவிட்டவர்கள். மதிப்பை இழந்தவர்கள்.

ஆற்றலிலும் அறிவிலும் அவர்களில் பன் மடங்கு கூடிய தமிழர் கட்சி சார்பில்லாது இருக்கின்றனர். அவர்கள் தங்கள் உள்ளக்கிடக்கைகளை எடுத்துக் கூறுதல்வேண்டும். வெளியிடப்பயந்து வேலிமேல் படுத்திருத்தல் தர்மமாகாது. பலபக்கமாயும் தமிழ் இனத்தை நசுக்குவது நியாயமாகாது என்று கூரைமேல் நின்று கூவுதல் வேண்டும். அரசு செவி சாய்க்கும், இல்லாவிடினும் பாமர சிங்களச் சகோதரர் அறிய வருவர். உலகம் அறியும்.

சீனசார்பு திரு. சண்முகதாசன் சில நாட்களுக்கு முன் இங்கு பல் கூட்டங்களில் தமிழருக்கு மாகாண ரீதியில் சுய ஆட்சி கொடுப்பதே ஞாயமும் இன ஒற்றுமைக்கும் இடம் கோரும் செயலாகும் என்றும் திட்டவட்டமாகக் கூறினர். அதே நேரத்தில் தமிழ் அரசுக் கட்சியைச் சாடாமல் இருக்கவில்லை! மாகாண ரீதியில் ஆட்சியையே இந்தக்கட்சியும் கேட்டு அலுத்தது என்று அறியார்போலும்— சீனசார்புக் கட்சிலிருந்து இக் கருத்து வெளிவந்தது நன்றே.

மாகாண ரீதியில் சுய ஆட்சிகேட்டு கிடைக்க வழி காணமையினலேயே பிரிவினை எண்ணம் உருவானது. எப்பொழுதும் நாங்கள் ஒற்றுமையையே விரும்புகிறேம். ஆனல் பல துறையிலும் சம அந்தஸ்தைக் கேட்கிறேம்: அடிமைகளாய் அடிவருட யார் விரும்புவார்? ஆட்சி செய்வோர் எங்கள் மனித உரிமைகளை மறுத்தால் இலங்கை இன்னல்களுக்கு ஆளாகும். நாமறியாமலே — ஒருவர் தூண்டாமலே, கலக நிலை ஏற்படும். இலங்கையை முன்னேற்ற, இன்னல்களினின்றும் காக்க தலைவர்கள் தலை நிமிர்ந்து முன்நோக்கி செயலாற்றல் வேண்டும். வெள்ளம் வரும் முன்னரே அணைகட்ட வேண்டும்; கட்சிசார்பற்ற தமிழ்த்தலைவர்கள் இதில் பெரும் பங்கெடுத்தல்வேண்டும்.

—டாக்டர். ச. இராசரத்தினம்.
கொக்குவில்
15-8-73

# அக்டோபர் 2 அறப்போருக்கு ஆண்டபரம்பரையே! புறப்படு!

அகத்தை புறத்தை அகநானூற்றை, கற்றேர் போற்றும் கம்பராமாயணத்தை கலிங்கத்துப்பரணியை, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை, நானிலம் போற்றும் நாலடியாரைத் தந்த தங்கத் தமிழ் மொழிக்கு அரசியலில் இடமில்லை.—

பாண்டியன் வளர்த்த பைந்தமிழ் மொழிக்கு, சேரன் வளர்த்த செந்தமிழ் மொழிக்குசோழன்வளர்த்த சொகுசு மொழிக்கு அரச பீடத்தில் இடமில்லை.—

தந்தையும் தாயும் குலாவி வளர்ந்த தங்கத் தமிழ் மொழிக்கு, இறைவன் வளர்த்த இனிய தமிழ் மொழிக்கு, ஔவை வளர்த்த அரும் பெரும் தமிழ் மொழிக்கு, அரசியல் அமைப்பில் இடமில்லை.—

வீரரோ தமிழர் என்று விருந்தினரால் இகழ்ந்து கூறியமைக்காக, ஆரிய நாட்டு மன்னன் ஆண்மையை அடக்கிவென்ற சேரனின் சொந்தக்காரர்களுக்கு அரசியல் உரிமை இல்லை.—

முன்னமோர் மோசிகீரன் முரசுறு கட்டிலின் மேல் உறங்கும் உறக்கம் கண்டு ஒண் [illegible] வெண்ணிறக்கவரி வீசிய கொற்றவன் சேரனை சேர்ந்தவர்கட்கு ஆட்சியில் உரிமை இல்லை.—

இந்த நிலையில் தமிழர் — உணவுக்கும் உடைக்குமாக வாழ வேண்டுமா? உடம்பினல் பலராக இருந்தாலும் உள்ளத்தால் ஒருவராகி, கன்னித் தமிழ் மொழியாற் உரிமைபெற கட்டிளங்காளைகளே அக்டோபர் 2ல் களத்தில் குதியுங்கள்.—

காதலால் கூடி நீங்கள் களித்திடும் புதிய வாழ்வில், சாதல்தான்வருமென்றலும்

அளவெட்டி ஸ்ரீ முருகன்

—தீதெலாம் அடைந்து வாழும் சிதைந்திடும் தமிழர் வாழ காதலாய் களத்தில் குதியுங்கள் — அன்னமே குயிலே என்றும் அரும் பெறல் திறனே என்றும்— முன்னை நாள் உவமை கூறுது இற்றை நாள் தமிழர் எய்தும் இன்னலைப் போக்க வேண்டி, அறப்போரில் அனைவரும் சேருங்கள்.

எந்த ஒரு மொழியும் அரச மொழியாக இடம்பெறுதிருக்குமானல் அந்த மொழி உலக வழக்கில் இருந்து மறைந்துவிடும். உதாரணமாக லத்தீனும்—சமஸ்கிருதமும் ஒரு காலத்தில், மொழி வளர்ச்சியால் உச்ச நிலையை அடைந்திருந்தன; பல இலக்கிய வளங்களைக் கொண்டிருந்தன ஆனல் இன்று அவ்விருமொழியும்—ஆலய பூசையால் இடம் பெற்றிருப்பதை தவிர வேறு இடங்களில் பிரதான இடம் வகிப்பதை காணவில்லை. மொழி அழிந்தால்—அந்த இனமும் விரைவில் அழிந்துவிடும்—

முப்பத்தைந்து நாடுகளில் பேசப்பட்டு வந்த தமிழ் மொழி — இன்று மூன்றே மூன்று நாட்டில் பேசப்படுகின்றன. அதிலும் — இந்தியாவில் இந்தியும் இலங்கையில் சிங்களமும் சிறிப்பாய்கின்றன.—

எனவே வள்ளுவன் தந்த தமிழ் மொழியை அப்பரும், சுந்தரரும், மாணிக்கவாசரும் தந்த தமிழ் மொழியை, வீரமாமுனிவர் வளர்த்த தமிழ் மொழியை, நமது காலத்தில் அழிந்தொழிய விடலாமா!

அக்டோபர் 2ல் அறப்போர் தமிழ் இனத்தின் விழிப்புப் போராகட்டும். வீர வாலிபர்களே, அக்டோபர் 2ல் அறப்போரை—வீதி வீதியாக விளக்குங்கள், வீடு வீடாகச் சொல்லுங்கள், உற்றுர்களை, உறவினர்களை சந்திக்கும்போது சொல்லுங்கள்— சொல்லுங்கள் — சொல்லுங்கள்—

சொல்லுவோம்வெல்லுவோம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அக்டோபர் இரண்டு அறப்போர் முரசு ஒலிக்குது!

அன்பு நண்பா,

அக்டோபர் இரண்டு — அண்ணல் காந்தி அவதரித்திட்ட திருநாள்! அடிமைத் தளையைப் பொடிப்பொடியாக்கிட — ஆங்கில ஏகாதிபத்தியத்தை அடித்து வீழ்த்திட அஹிம்சையெனும் ஆயுதத்தை அடக்கியொடுக்கப்பட்ட இந்திய மக்களிடம் எடுத்துத்தந்து — கோழைகளாய் மோழைகளாய் அஞ்சி அஞ்சிக்கிடந்த அந்த மக்களை ஆண்மை வீரர்களாக்கி, விடுதலை பெற்றுத்தந்த சாந்த சொரூபி மகாத்மா காந்தி பிறந்திட்ட புனிதநாள்!

இத்திருநாளில்தான், அடிமைத்தனத்தில் மூழ்கி—சிங்கள ஏகாதிபத்தியத்துள் சிக்குண்டு-விடுதலை இழந்து, மொழி உரிமை இழந்து, வெந்துயரில் வீழ்ந்து கிடக்கின்ற ஈழத்தமிழ்த் தேசிய இனம்—வீறுகொண்டெழுந்து, ஆண்ட பரம்பரை நாம்—மீண்டும் இழந்த நம் ஆட்சியை அமைத்தே திருவோம் என்று ஆர்த்தெழுந்து கடந்த ஓராண்டுக்குமேலாக நடந்து வருகின்ற போராட்டப் பாதையிலேயே-புதியதோர் சட்டமறுப்பு இயக்கத்தில் குதிக்கவிருக்கின்றது என்கின்ற செய்தி விடுதலை விரும்பிகளின் நெஞ்சமெல்லாம் இனித்திடுகின்ற செங்கரும்புச் செய்தியென்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை!

திட்டமென்ன தந்திடுவீர்; செயற்படுத்த நாம் உள்ளோம்; கஷ்டங்கள் ஒன்றல்ல — பல கோடி குறுக்கிடினும் நாம் அஞ்சோம்; கொட்டவருகின்ற சிங்கள ஏகாதிபத்தியமெனும் கொடுந்தேளின் வாலினை ஒட்ட நறுக்கிடுவோம்; உரிமை வாழ்வு அமைத்திடுவோம்; ஒருமுறைதான் சாவு வரும்— அதனை உரிமைப் போரில் அடைந்திடினும் தயங்கமாட்டோம்; தமிழ்ஈழம் விடுதலை பெற்றிட, அன்னைத்தமிழின் அடிமை விலங்குபொடிபட, பயன்படுத்திடுவீர் எம்மை என தமிழர் கூட்டணித் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துவந்த தமிழ் ஈழத்தின் தங்கக்காளைகளுக்கு — சிங்க ஏறுகளுக்கு அக்டோபர் இரண்டு — சட்ட மறுப்புப் போராட்ட அறிவிப்பு அகமகிழ்ச்சி தந்திடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

ஆனாலும் அன்னவர்க்கும் இதிலேகூட பூரண திருப்தி இல்லையென்பதையும் நான் அறிவேன்! அக்டோபர் இரண்டு சட்டமறுப்பு போராட்டத்தை ஓர் பொதுஜனப்போராட்டமாக அமைக்காது — பல்லாயிரவர் பங்கேற்கின்ற ஒரு போராட்டமாக அமைக்காது பொறுக்கியெடுக்கப்பட்ட தொண்டர்கள் மட்டுமே பங்குபற்றுகின்ற ஒரு போராட்டமாக இதை நடத்தப்போவதாக தமிழர் கூட்டணியினர் அறிவித்திருப்பது துடித்து நிற்கின்ற இளைஞர் கூட்டத்துக்கு போதியளவு உற்சாகத்தைத் தந்திடக்கூடியதாக இல்லையென்பது உண்மைதான்!

என்றாலும்கூட தமிழ்ஈழ விடுதலைப் போர், மெல்லமெல்ல—ஆனால் உறுதியாக வளர்ச்சியடைந்துவருகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் அக்டோபர் இரண்டு சட்டமறுப்பு இயக்கம விஸ்தரிக்கப்படுகின்ற நிகழ்ச்சியாகும்! போராட்டப் பாதையிலே தமிழினம் மெல்ல மெல்ல — ஆனால் உறுதியாக முன்னேறிச் செல்கின்றது என்பதுதான் அக்டோபர் 2—போராட்டம் தருகின்ற தித்திக்கும் சேதியாகும்.

நண்பா, —1972 அக்டோபர் இரண்டாம் நாள்—தமிழ் தேசிய இனத்தின் சார்பில் 25-6-72ல்சமர்ப்பிக்கப்பட்ட ஆறு அம்சக்கோரிக்கையை ஆட்சியாளர் உதாசீனம் செய்துவிட்டதை எதிர்த்து பரிபூரண 'ஹர்த்தால்' ஒன்று தமிழ் ஈழம் முழுவதும் நடைபெற்றதும்—அதையடுத்து புதிய அரசியல் சட்டத்துக்கு தமிழ்த் தேசிய இனத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்பை எடுத்துக்காட்டிடவும் ஆட்சியாளரின் பொய்ப்பிரசாரத்தினைப் பொடிபொடியாக்கிடவும்—அக்டோபர் 3ம் நாள் தமிழ்ஈழத்தின் முதல்வர் பெரியவர் செல்வா ஆட்சியாளருக்கு சவால் விடுத்து தேசிய அரசு பேரவை உறுப்பினர் பதவியை விட்டு நீங்கியதும்—தமிழ் ஈழத்துக்கு வருகை தந்திட்ட சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடையாளச் சின்னங்களான அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்ததும்—நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவின் விஜயத்தை எதிர்த்து ஹர்த்தால் அனுட்டித்ததும்—அதையொட்டி மாவை சேனாதிராஜா, முத்துக்குமாரசாமி போன்ற எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் திடீரென கைதுசெய்யப்பட்டு விசாரணையின்றி சிறையிலடைக்கப்பட்டதை எதிர்த்து தமிழ் இளைஞர் பேரவையினர் 15-3-73ல் பாடசாலைப் பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்திய வேளையில் தமிழர் கூட்டணித் தலைவர்கள யாழ் நீதிமன்றத்தின் எதிரே உண்ணாவிரதம் மேற்கொண்டதும் — தமிழ் பிள்ளைகளின் போதனா மொழி தமிழ் என்னும் அடிப்படைச் சட்டத்தை மீறி புத்தூர் பஞ்ஞசிக பாடசாலையில் படித்து வந்த தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் சிங்களத்தை பலவந்த போதனா மொழியாகத் திணித்த அரசின் கொடுமையை எதிர்த்து — கல்விச் சட்டத்தையே மீறி — தனித் தமிழ்ப் பாடசாலையொன்றை புத்தூரில் நிறுவி, தமிழ் மாணவர்கள் தமிழிலே கல்விகற்கும் உரிமையை நிலைநாட்டிவருவது — ஆகிய இத்தகைய சில போராட்ட நடவடிக்கைகளிலேயே கடந்த ஓராண்டாக தமிழர் கூட்டணி ஈடுபட்டிருந்தது!

கடந்த ஓராண்டாக இவ்வளவுதானா தமிழர் கூட்டணி எடுத்த நடவடிக்கையென்று எண்ணிப் பார்த்திடும்போது— நம்முள் தீவிர போராட்டத்தை ஆதரித்திடும் நண்பர்களுக்கு—என் இளம் தம்பிகளுக்கு — இது திருப்தியாகக் காணப்படாவிடினும் — தமிழர் கூட்டணித் தலைவர்களின் பதட்டமற்ற அமைதியான நடவடிக்கைகளினால் உலக அபிப்பிராயம் இன்றைக்கு தமிழினத்தின் போராட்டத்துக்கு சார்பாக வந்துகொண்டிருக்கின்றது. தமிழ் தேசிய இனம் அமைதியாக போதிய அவகாசம் கொடுத்துப் பொறுத்துப் பொறுத்துப்பார்த்த பின்னரேதான் — அக்டோபர் இரண்டு முதல் மீண்டும் போராட்டத்தைத் தீவிரப்படுத்துகிறது என்பதை உலக நாடுகள் இன்று உணர்ந்து—நமது போராட்டத்திலுள்ள நியாயத்துக்கு தலைவணங்குகின்ற நிலை இன்று ஏற்பட்டுவருகிறது.

தமிழர் கூட்டணி நடத்துகின்ற போராட்டம்—தமிழ்த் தேசிய இனம் குதிக்கவிருக்கின்ற சட்டமறுப்பு இயக்கம் — முற்றிலும் நியாயமானதுதான் என்பதை சென்னையிலிருந்து வெளிவருகின்ற தேசிய நாளேடான 'தினமணி' போன்ற ஏடுகள் இன்று பூரணமாக ஏற்றுக்கொண்டு ஆதரவாகத்தலையங்கம் தீட்டுகின்ற நிலை தோன்றியிருப்பதைக், காண்கின்றேம்!

நண்பா, தமிழ்தேசிய இனத்தின் தன்னாட்சிக்கோரிக்கைக்கு சார்பாக உலக அபிப்பிராயம் இப்போது மெல்ல மெல்லவளர ஆரம்பித்து வருகிறது! இதில் நம்முடைய இரத்தமும் சதையும் கொண்டவர்களான நாலரைக் கோடி தமிழர்களைக் கொண்ட தமிழ்நாடு இன்றைக்கு முன்னணியில் நிற்பதைக் காண்கின்றேம்! ஈழத்தமிழ் மக்களுக்கு சார்பாக இன்றைக்கு தமிழகத்தில் உலகத்தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் இரா. சனார்த்தனம், கவியரசு கண்ணதாசன், சிலம்புச் செல்வர் ம. பொ. சி. பெரியார் கி ஆ. பெ. விசுவநாதம், முதல்வர் கலைஞர் கருணாநிதி போன்றவர்களால் எழுப்பப்படுகின்ற பாசக்குரல்— நேசக்குரல்—உலக நாடுகள் அனைத்திலும் பரவி எதிரொலிக்கின்ற காலம் — அதிக தூரத்தில் இல்லை!

## அரசியல்

அந்தக்காலத்தை கனிய வைக்கக்கூடிய வகையில்—பதட்டமற்ற—ஆனால் உறுதியான நிலையில் நம்முடைய போராட்டங்கள் அமையவேண்டும்; மாற்றுரும் மாநிலமும் நம் பக்கத்திலுள்ள நியாயத்தை ஏற்கும் நிலைமை உருவாகவேண்டும்; அத்தகைய ஒரு நிலையை தமிழர் கூட்டணியின் போராட்டங்கள் இன்று உருவாக்கி வருகின்றன!

இந்த ஆண்டு ஏப்ரல் 6ம் நாள் கல்விச் சட்டத்தை மீறி—போதனா மொழி யுரிமையை நிலைநாட்டும் பொருட்டு புத்தூரில் தனியொரு தமிழ்ப்பாடசாலையை ஆரம்பித்ததே தமிழர் கூட்டணி தொடங்கிய சட்டமறுப்பு போராட்டத்தின் முதலாவது கட்டமாகும்!

புத்தூர் சட்டமறுப்புப் பாடசாலைப் பிரச்சினையில் ஆட்சியாளர்கள் நடவடிக்கையெடுத்திட அஞ்சி நடுங்கிப் பின்வாங்கியதே அந்தப்போராட்டத்திலுள்ள நியாயத்தை — நமது தார்மீக பலத்தை — அகில உலகுக்கும் உணர்த்திவிட்டது! தங்கள் மனச்சாட்சியே தங்களை குத்தியதுதான் புத்தூர் சட்டமறுப்பு பாடசாலைக் கெதிராக அரசினரால் நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாமல் போனதற்கு ஒரே காரணமாகும்.

சட்டமறுப்பு இயக்கத்தின் இரண்டாவது கட்டம் தான் நாளை மறுதினம்—அக்டோபர் 2ம்நாள் தமிழ் ஈழம் முழுவதும் ஆரம்பிக்கப்படுகின்ற போராட்டமாகும்!

இந்தப் போராட்டம் ஆரம்பமாகின்ற அக்டோபர் 2ம் நாள் — காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாமல் ஓராண்டாக இழுத்தடித்து தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படை ஜனநாயக உரிமையாகிய தனது பிரதிநிதியை தேர்ந்தெடுத்திடும் உரிமையைக்கூட சிங்கள அரசு மறுத்து வருவதை எதிர்த்து மாவிட்டபுரத்திலே பல்லாயிரக்கணக்கான மக்கள் உண்ணாவிரதம் இருந்திடப்போகிறார்கள்!

எனவே நண்பா—போர் முழக்கம் கேட்கிறது — புத்துணர்வுடன் புறப்படு—சாத்வீக அடிப்படையில் சமர் தொடுத்திடுவோம்! தலைவர்களின் ஆணைப்படி சட்டங்களை மீறுவோம்! ஒத்துழையாமை இயக்கத்தை விரிவுபடுத்துவோம்! தியாகத்தீயில் குதித்து வீர சுதந்திரம் பெறுவோம்! விரைந்துவா!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

---

# தியாகமே நமது திருப்பாதை

ஏ! வீரத்தமிழர் பேரவையே! —தீர இளைஞர்களே உங்கள் பொற் பாதங்களில் எங்கள் சிரசை மலராகப் பெய்கின்றோம். உங்களை நாங்கள் வணங்குகின்றோம். நீங்கள் தான் எங்கள் வழிகாட்டிகள். நீங்கள்தான் எங்கள் தலைவர்கள் — நீங்கள்தான் எங்கள் குருநாதர்கள். நீங்கள் எங்கள் ஈழத்தமிழகத்தின் இரும்புத்தூண்கள் — ஆமாம் ... நீங்கள் எங்கள் கொடிபொறித்தகொள்கை வீரர்கள் — தொண்டர்கள்.

தியாகமே நமது திருப்பாதையாக அமைந்து விட்டது - கோப்பாய்க்கோமானிலிருந்து திருக்கோணமலை ஏகாம்பரம் வரை தியாகத்தால் அமரரானது, எங்கள் பேரதிஷ்டமாகும். தியாக வரலாற்றில் திரம் புரிந்த தியாகி நடராசனில் இருந்து பத்தாம் நம்பர் சந்திரன் வரை நாம் சமீபகால கட்டத்தில் கண்டுள்ளோம் —

செய் — அல்லது— செத்து மடி, என்பது அவர்கள் தாரகமந்திரமாகும் —தமிழ் மொழி மீதிருந்த தணியாத தாகம் — பற்று — பாசம் — அவர்களை வெறி கொள்ள வைத்தது. உயிரையே அர்ப்பணித்து உத்தமர்களாகி விட்டார்கள் அவர்கள். மிக மிக உயர்ந்த மட்டத்திலே நாம் அவர்களை வைத்துப் பூஜிக்கின்றோம். எதிர்காலத்தில் நிட்சயமாக மலரப் போகும் ஈழத்தமிழகத்தின் ஸ்தாபகர்கள் அவர்கள். அவர்கள் வெட்டிய அத்திவாரத்தின் மீதே நமது ஈழத் தமிழகம் நிலை பெறப் போகின்றது. இதற்கான பாதையை வகுத்தது மாத்திரமன்றி நாமேதான் முன்னணி வீரர்கள் என்று நமக்கும் வழிகாட்டி [illegible] றுள்ளார்கள். [illegible] தொடர்ந்து செல்வதற்கு எத்தனைபேர் தயார் என்று இன்று கேட்க வேண்டிய அவசியமேயில்லை.

''எப்போது அறப்போர் தொடங்கும்''? என்று எதிர்பார்த்து ஏங்கித்துடித்துக் கொண்டிருக்கும் வீரத்திராவிட இளைஞர் சமுதாயத்திடம் இப்படி ஒரு கேள்வி எழுப்புவது அவர்களது கௌரவத்தைப் பாதிப்பதாகஅமையும். அணி அணியாக— அலை அலையாகத் திரளப் போகும் தியாகிகளைப்பார்த்துத் தமிழன்னை ஆனந்தக் கண்ணீர் வடிக்கப் போகின்ருள்.

ஏ. எட்டப்பர்களே! காட்டிக்கொடுக்கும் காக்கை வன்னியர்களே இதோ நமது [illegible] துடன் தொடர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் நீங்கள் சற்றுச் சிந்திக்கவேண்டும். நாம் கொள்ளிவாய்ப் பசாசுகளின் கொலுவிலே பழிக்கப்படுகின்றோம், இழிக்கப்படுகின்றோம், அழிக்கப்படுகின்றோம், சிறிது சிறிதாக ஒழிக்கப்படுகின்றோம்.

இதை எதிர்த்துக் கிளம்பி வரும் அறப்படைக்கு எதிராகச்செய்யும் சேட்டைகளை நிறுத்துங்கள். சேர்ந்து குரைத்தது போதும். கடைசித் தருணத்திலாவது கண்ணைத்திறவுங்கள்.

நேற்றுவரை போக்கிரியாய் இருந்த ஒருவன் இன்றே நேர்மையாளனாக மாறலாம். தனது பிழையை உணர்ந்து திருந்திய ஒருவனுக்கு நிட்சயமாக மன்னிப்புண்டு, எனவே நீங்கள் முன்னை நாள் குற்றவாளிகளாகக் கணிக்கப்படமாட்டீர்கள். உணர்ந்து உதறி வந்த உத்தமர்களாக— எங்கள் தலைவர்களுள் ஒருவராக, மதிக்கப்படுவீர்கள்.

நேற்றைய பாவங்களைக் கழுவுங்கள் போற்றத்தகும் போராட்டத்தில் நீங்களும் குதியுங்கள் நீங்கள் புரிந்த துரோகங்கட்கெல்லாம் இது பிராயச்சித்தமாக அமையட்டும்.

நமதுபாதை தியாகத்தால் உருவாக்கப்படவேண்டியது; தியாகமே நமது திருப்பாதையாகும். ஈழத்தமிழகம் என்கிற பயிர் தழைப்பதற்கு எருக்கள் பல வேண்டும்.

ஆமாம், பைந்தமிழ்தாயின் வெற்றிப்பயிர் தழைத்தோங்க வேண்டுமானுல், நாம் பசளைகளாக நம்மையே அர்ப்பணிக்கும் திருநாளைத் தியாக நாளாக — திருநாளாகக் கொண்டாட வேண்டும்.

— எஸ். விஸ்வராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# சட்டமறுப்பு!

தமிழர் கூட்டணியின் சாத்வீக சட்டமறுப்பு இயக்கம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி அண்ணல் காந்தி அவதரித்த புனித நாளாகிய அக்டோபர் 2ம் நாள் ஆரம்பமாகிறது.

கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும் என்று கடந்த ஓராண்டாக காத்திருந்த தமிழ் மக்கள்—பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை ஆட்சியாளருக்கு புரியவைப்பதற்காக போராட்டப் பாதையிலே நடைபோட முடிவெடுத்துவிட்டார்கள்.

உண்மையிலேயே தமிழர் கூட்டணி தனது சட்டமறுப்பு இயக்கத்தை சென்ற ஆண்டு அக்டோபர் 2ம் நாளே ஆரம்பித்திருக்கவேண்டும்!

ஏனெனில்—1972 ஜூன் திங்கள் 25ம் நாள் தமிழர் கூட்டணி தனது சட்ட மறுப்பு இயக்கத்தை சென்ற ஆண்டு அக்டோபர் 2ம் நாளே ஆரம்பித்திருக்கவேண்டும்!

ஏனெனில்—1972 ஜூன் திங்கள் 25ம் நாள் தமிழர் கூட்டணி நடவடிக்கைக்குழு எடுத்த தீர்மானம்—கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் அரசியமைப்பைத் திருத்துவதற்கு 1972 செப்டம்பர் 30ம் நாளுக்கு முன்னர் அரசு நடவடிக்கையெடுக்கத் தவறுமானல்—"தமிழினத்தின் சுதந்திர உரிமைகளை மீண்டும் பெறுவதற்கும் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழினத்தின் அரசியல் பொருளாதார சமூக கலாசார வாழ்வை அமைத்துக் கொள்வதற்கும்" சாத்வீகச் சட்டமறுப்பில் இறங்குவது என்பதுதான்!

1972 அக்டோபர் இரண்டாம் நாள் சாத்வீகப் போராட்டத்தில் குதித்திருக்கவேண்டிய தமிழர் கூட்டணி, அரசாங்கத்துக்கு மேலும் சந்தர்ப்பம் கொடுப்பதற்காக, ஒன்றல்ல இரண்டல்ல—கடந்த பன்னிரண்டு மாதங்கள் நேரடிப் போராட்டத்திலிறங்காமல் பொறுமையைக் கடைப்பிடித்தது.

அதுமட்டுமன்றி — நேரடிப் போராட்டத்திலிறங்குவதற்கு முன், ஜனநாயக முறைப்படி புதிய அரசியல் சட்டம் பற்றி தமிழினத்தின் கருத்தை அரசுக்கு அறியச்செய்ய ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தித்தரும் பொருட்டே 1972 அக்டோபர் 3ம் நாள் தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா தமது தேசிய பேரவை உறுப்பினர் பதவியை ராஜினமா செய்து இடைத்தேர்தல் நடத்துமாறு அரசுக்கு அறைகூவல் விடுத்தார்.

அந்த முதுபெரும் கிழவரின் ஜனநாயகச் சவாலைக்கூட ஏற்க அஞ்சி, நொண்டிக் காரணங்களைக் காட்டி கடந்த ஓராண்டாக இடைத்தேர்தலை நடத்தாது தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையையே மறுத்துவருகிறது சிங்கள அரசு!

இதற்குப் பின்னும் தமிழர் கூட்டணி சாத்விகப் போராட்டத்திலிறங்காது பொறுத்திருக்கவேண்டுமென்று எவரும் எதிர்பார்த்திருக்கமுடியாது. தமிழர் கூட்டணியின் சட்டமறுப்பு போராட்டம் முற்றிலும் நியாயமானதுதான் என்பதை இந்நாட்டின் அரசியலை உன்னிப்பாக கவனித்துவரும் நடுநிலையாளர்கள் எவருமே ஒப்புக்கொள்வர்!

சாத்விகச் சட்டமறுப்பு போராட்டத்தில் தமிழர் கூட்டணி குதிக்கின்ற அதே வேளையில்—பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க திறந்த மனதுடன் அரசாங்கம் அழைக்குமானல் அதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம் என்பதை கூட்டணித் தலைவர்கள் தெளிவாகக் கூறிவருகிறார்கள்.

எனவே சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல், பொருளாதார சமூக கலாசார வாழ்வை அமைத்து, தமிழினத்தின் சுதந்திரத்தை மீண்டும் நிலைநாட்டுகின்ற உன்னத நோக்கத்தை அடிப்படையாக வைத்து—தமிழர் கூட்டணி அக்டோபர் 2ம் நாள் தொடங்குகின்ற அறப்போர் — இலட்சியம் நிறைவேறுகின்றவரை தொடர்ச்சியாக நடைபெறக்கூடிய ஓர் நீண்ட போராக அமையவேண்டும் எனகின்ற தமிழ் மக்களின் ஆசையை இந்த நேரத்தில் கூட்டணித் தலைவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## உண்ணாமைக்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் பொறுக்கியெடுக்கப்பட்ட 20, 25 இளைஞர்கள் மட்டுமே பங்குபற்றுவதாக வரையறையுடன் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதம், இப்போது இளைஞர்களின் கரைகடந்த உணர்ச்சிப் பெருக்கினல் 60-70 ஆக உயர்ந்துவிட்டது. ஒவ்வொரு நாள் உண்ணாவிரதத்தின்போதும், அலை அலையாக மக்கள் திரண்டு வந்து இளைஞர்களை வாழ்த்திச் செல்வதுடன், கருத்தரங்குகளிலும் பங்குபற்றி தலைவர்களின் உரைகளை கேட்டு தெளிவுபெறுவது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது.

தமிழ்த் தேசிய கீதம், கருத்தரங்குடன் ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் உண்ணாவிரதம் அடுத்த நாள் மாலை 6 மணிக்கு கருத்தரங்கு, தேசிய கீதத்துடன் முடிவடைகிறது. அதே வேளையில் மற்ருரிடத்தில், தேசியகீதம், கருத்தரங்கு இவற்றுடன் உண்ணாவிரதம் ஆரம்பமாகிறது.

### 11வது நாள் போராட்டம்

உண்ணாவிரதம் —11வது நாள் போராட்டம் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள அராலி கிழக்கு அம்மன் கோவிலடியில் 21.9.73 மாலை 6 மணிக்கு தேசிய கீதம், கருத்தரங்குடன் ஆரம்பமாகி, 22.9.73 மாலை 6 மணிக்கு முடிவுற்றது. கருத்தரங்குக்கு ஓய்வுபெற்ற அதிபர் மு. சதாசிவம் தலைமைதாங்கினர். திரு. சு. நடராசா, திரு. தம்பித்துரை, புஷ்பராசா, திருமதி மங்கையர்க்கரசி உட்பட பலர் இங்கு உரையாற்றினர். முடிவில் சமபந்தி போசனமும் இடம்பெற்றது.

### 12வது நாள் போராட்டம்

இளைஞர் பேரவையின் 12வது நாள் உண்ணாவிரதப் போராட்டம் காரைநகரிலுள்ள வலந்தலை மடத்துக்கரை அம்மன் கோவில் வீதியில் 22-9-73 மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி, 23.9.73 ஞாயிறு மாலை 6 மணிக்கு முடிவடைந்தது. ஐம்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்ட இந்த உண்ணாவிரதத்தினை தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தொடக்கிவைத்தார்.

### 13வது நாள் போராட்டம்

13வது நாள் உண்ணாவிரதப் போராட்டம் 23.9.73 ஞாயிறு மாலை 6 மணிக்கு பண்ணாகம் வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பமாகி 24.9.73 திங்கள் மாலை 6 மணிக்கு நிறைவெய்தியது. நூற்றுக்குமேற்பட்ட இளைஞர்கள் இதில் கலந்துகொண்டனர். கருத்தரங்கிலும் ஆயிரக்கணக்கானேர் கலந்துகொண்டனர்.

### சுதுமலை இளைஞர்கள்

மானிப்பாய், சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோவில் முன்றலில் நடைபெற்ற ஐந்தாவது நாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்களின் பெயர்கள் வருமாறு:-

வே. குணராஜா, செ. தருமலிங்கம், பொ. செல்வநாயகம், க. யோகநாதன், த. ஜெயலொளிபவான், அ. சண்முகநாதன், க. ஞானம், த. தவநாயகம், கு. குணசீலன், சி. தருமராசா, ச. மகாராஜா, த. கிருபானந்தன், ம. செ. செல்வரட்டினம், சி. விஜயன், சி. சிவகுருநாதன், க. சின்னராசா.

# தமிழர்களின் நண்பர் வில்மட் பெரேரா

'நாங்கள் எங்களுக்கும் சிறுபான்மை இனத்தினராகிய தமிழ் பேசும் மக்களுக்கும் இடையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறினல் ஒரு நாள், அவர்கள், (தமிழர்கள்) அவர்களை மிகவும் ஆவலுடன் ஏற்றுக்கொள்ளத்துடித்துக் கொண்டிருக்கும் ஒரு நாட்டினரின் கைக்குள் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாவார்கள்.

—இவ்வாறு 'மாவட்ட சபைகள்' பற்றி எழுதிய தனதுகட்டுரையில் (டெயிலி நியூஸ் June 22, 1968) காலஞ்சென்ற திரு. வில்மட் பெரேரா குறிப்பிட்டதையும் இன்று தமிழர் மத்தியில் எழுந்துள்ள 'தனிநாடு' கோரிக்கையையும் ஒப்பு நோக்குங்கால் அவர் ஒரு தீர்க்கதரிசி என்றே கூறத் தோன்றுகின்றது.

அதே கட்டுரையில் அவர் தனக்கும் காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவிற்கும் இடையில் நடைபெற்ற உரையாடலைக் கூறுகின்றர். பின்னவர், பிரதமராகப் பதவியேற்று அப்பொழுது ஒரு கிழமைதான் வெற்றிக்களிப்பில் இருக்கின்றார்.

பண்டா: 'நீர் தேர்தலில் போட்டியிடாததைப் பற்றி இப்பொழுதாவது மனம் வருந்தவில்லையா?'

வில்மட்பெரேரா: உமக்குத் தெரியும்தானே உமது மொழிப்பிரச்சினையினல் (language Business) தான் நான் தேர்தலில் போட்டியிட வில்லை என்பது.'

பண்டா: 'பொறுத்திருந்து பாரும் நான் எப்படி பிரதேச சபைகள் மூலம் இப் பிரச்சினையைத் தீர்க்கின்றேன் என்று.'

திரு. வில்மட்பெரேரா: அரசியல் அரங்கிலிருந்து வெளியேறியதற்குக் காரணமே 'தனிச் சிங்களக் கொள்கை' தான்.

'தமிழ்பகுதிகளில்சிங்களக் குடியேற்றம் பற்றிய பிரச்சினையில் கூட அவர்' ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் இருக்கும் காணியில்லாத மக்களுக்கே முதலுரிமை (First Preferencc) அளிக்கப்பட வேண்டும். பிறகுதான் மற்றையவர்களுக்கு என்று கூறுகிறார். சாதாரணமாக கிராம அபிவிருத்தித் திட்டத்திலேயே ஒரு கிராமத்தில் வேறு கிராமத்தினரைக் கொண்டு வந்து குடியேற்றினல் எவ்வளவு எதிர்ப்பு ஏற்படுகின்றது. தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தையும் இக்கண்ணேட்டத்துடன் பாரபட்சமின்றி அணுகினல் தமிழரின் எதிர்ப்பு நியாயமாகவே தெரிகின்றது. (டெயிலி நியூஸ் June 22, 1968) எனத் தைரியமாகக் கூறியுள்ளார்.

அதே கட்டுரையில் அவர் திருகோணமலைத்துறைமுகத்தின் சர்வதேச முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு சிறுபான்மையினரின் பிரச்சினைகளை ஆட்சியாளர் தீர்க்கத் தவறினல் நிகழவிருப்பது சர்வநாசம் என்று எச்சரித்துள்ளார்.

அவர் பல சந்தர்ப்பங்களில் சமஷ்டி ஆட்சி முறையை ஆதரித்துப் பேசியுள்ளார். தமிழர் போராட்டங்கள் நடைபெறும் பொழுதெல்லாம் அவற்றை ஆதரித்து அறிக்கை விடுக்கும் முதல் சிங்களவராக இருந்தவர் திரு. வில்மட்பெரேரா. தந்தை செல்வா மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தவர். அவர் மன்றில் இருந்த [illegible] தமிழரசுக் கட்சி தனது கொள்கைகளையும் சாதாரண சிங்கள மக்களுக்கு விளங்கும் படியாக சிங்கள மொழியில் வெளியிடுவதில்லை என்பதுதான். இதை அவர் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். (சென்ற வார சுதந்திரனில் 'மூவேந்தன்' எழுதிய கட்டுரையிலும் அதையே குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.)

சிங்களவர் மத்தியில் நமக்கு என்று இருந்த ஒரே நல்ல இதயம் மறைந்துவிட்டது. எமது போராட்டத்திற்கு என்றும் தார்மீக ஆதரவைத்தந்து கொண்டிருந்த பெரியார் மறைந்துவிட்டார். அவர் கூறியவை அனைத்தும் தீர்க்கதரிசனம் என்பதைக் காலம்தான் உணர்த்தும்.

—த. சிவநாதன்.

# சேனதி, பூபதி மீது சி. ஐ. டி. பொலிஸ் தாக்குதல்!

"அவசரகாலச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் இரகசிய பொலிஸ் பிரிவான நாலாவது மாடிக்கு கொண்டுவரப்பட்டு பொலிசாரால் தாக்கப்படுகின்றனர். அவர்கள் தமக்குத் தெரியாத விடயங்களை தெரியுமென ஒப்புக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படுவதுடன் கண்ட கண்ட ஆவணங்களில் கையொப்பமிடும்படி கேட்கப்படுவதாக அறிகிறேன்.

"காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் பொலிசாரினல் கண்டபடி தாக்கப்படுவதாக நாங்கள் இங்கு இதற்கு முன்னரும் ரஸ்தாபித்துள்ளோம். அப்போது ஆதாரங்களுடன் இவற்றைக் கூறினல் விசாரணை நடத்தப்படும் என அரசாங்கத்தரப்பில் கூறப்பட்டது.

எனவே இன்று நான் காவலில் இருந்துவரும் பூபதி பாலவடிவேற்கரசன், சேனதிராஜா ஆகிய இருவரும் பொலிசாரினல் தாக்குதலுக்குள்ளான விபரத்தை ஆதாரத்துடன் இங்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன்"

—20—9—73ல் தேசிய அரசுப்பேரவையில் உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம் பேசியது—

## அக்டோபர் 5ல் கிழக்கில் உண்ணாவிரதம்!

தமிழ் இளைஞர் பேரவை தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் நடத்திக்கொண்டிருக்கும் உண்ணாவிரத இயக்கம் அக்டோபர் 5-ந் திகதி கிழக்கு மாகாணத்தில் ஆரம்பமாகும்.

கிழக்கு மாகாணத்தில் முதன்முதலாக மட்டக்களப்பிலுள்ள விபுலானந்தர் சிலையின் முன்னல் இந்த உண்ணாவிரதம் ஆரம்பமாகும்.

அக்டோபர் 15ந் திகதி தொடக்கம் 3தினங்கள் மலையகத்திலும் நடைபெறும்.

வவுனியாவில் அக்டோபர் 21ந் திகதியும், மன்னரில் 23ந் திகதியும், அதன்பின் கிளிநொச்சி, பருத்தித்துறை ஆகிய தொகுதிகளிலும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவாஜியை அவமதித்தது இலங்கை அரசு!

தமிழர் கூட்டணிப்பிரமுகர் ஒருவரின் அரசியல் வெள்ளி விழாவுக்காக திரு. சிவாஜி கணேசன் இங்கு வரவிருந்ததாலேயே அவருக்கு இலங்கை அரசாங்கம் விசா வழங்கவில்லை என்று பிரதி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரான திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறியதாக ஒரு செய்தி வெளிவந்திருந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்தச் செய்தியில் அமைச்சரால் குறிப்பிடப்பட்ட கூட்டணிப் பிரமுகர் நான் தான்.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்திருக்கும் நண்பர் கருணாநிதி அவர்கள் எனது அரசியல் வெள்ளிவிழாவில் கலந்து கொள்ளுமாறு திரு. சிவாஜி கணேசனுக்கு கடிதம் மட்டுமே எழுதியிருந்தார் இந்த கடிதத்துக்கு திரு சிவாஜி கணேசனிடமிருந்து பதில் தானும் கிடைக்கவில்லை. நிலைமை அப்படியிருக்க அரசாங்கமோ சிவாஜி கணேசன் அரசியல் கூட்டத்துக்கு வரவிருந்ததாலேயே அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறது.

அரசாங்கம் இதுவிஷயத்தில் திர விசாரணை செய்யாமல் அவரை இலங்கைக்கு வர முடியாதவாறு தடுத்ததன் மூலம் அந்த பெரும் கலைஞருக்கு அவமரியாதையை ஏற்படுத்தி விட்டது. இது பெரும் கவலைக்குரியது.

— கந்தரோடை வன்னியசிங்கம் நினைவு தினக் கூட்டத்தில் உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம் பேசியது—

### சுயாட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'தமிழர் சுயாட்சிக்கோரிக்கை பற்றி நான் அபிப்பிராயம் தெரிவித்ததாக 23-9-73ல் உங்கள் தினகரன் வாரப்பதிப்பில் வெளியிடப்பட்டிருந்த செய்தி ஒன்று என் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டது. அதைப்பார்த்து நான் ஆச்சரியமும், திகைப்பும் அடைந்தேன். அம்மாதிரியாக நான் ஏதும் சொல்லவில்லை யென்பதையும் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளவைகள் எமது கருத்துக்களைப் பிரதிபலிப்பனவல்ல என்பதையும் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இதற்கு முன்னும் இதே போல் தினகரன் 24-6-73ம் திகதிப் பத்திரிகையிலும் சில விஷயங்களை என்பேரில் சுமத்திப் பிரசுரிக்கப்பட்டிருப்பதையும் கண்டு மிகவும் வருந்துகின்றேன்.

சுயாட்சிக்கோரிக்கை' பற்றிய இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நிலையை 6-6-73ல் சில பத்திரிகைகளில் வெளியான எனது பேட்டி நன்கு தெளிவு படுத்தியிருக்கின்றது என்பதையும் இங்கு குறிப்பி விரும்புகிறேன். அந்தப் பேட்டி அறிக்கையின் நகல் ஒன்றையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

(சுயாட்சிக்கோரிக்கை பற்றி திரு. தொண்டமான் அவர்கள் குறிப்பிடும் அறிக்கை ஏற்கெனவே சுதந்திரனில் வெளிவந்தது வாசகர்களுக்கு நிலே விருக்கலாம்.)

# கறுப்புக் கொடிக்குப் பயந்து குமாரசூரியர் பின்வாங்கினர்!

## வேலணை விஜயம் ரத்தான காரணம்!

வேலணை காரியாதிகாரி அலுவலகத்தை யாழ்ப்பாண அரசாங்க அதிபரே திறந்து வைக்க அமைச்சு ஒழுங்கு செய்தது. தமிழ்ப் பகுதிகளில் திறக்கப்பட்ட புதிய காரியாதிகாரி அலுவலகங்கள் யாவும் அரசாங்க அதிபராலும் அவ்வத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராலுமே திறக்கப்பட்டன.

எனினும் வேலணைக் காரியாதிகாரி அலுவலகத்தை மட்டும் உள்ளூர் ஆட்சி உண்ணாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சரைக் கொண்டு திறப்பிக்கச்செய்ய வேண்டுமென்று புங்குடுதீவிலும் புதிதாக வேலணையிலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி லேபலை ஒட்டிக் கொண்டு திரியும் 'தரகர்கள்' சூழ்ச்சி செய்தனர். அமைச்சர் திரு. குமாரசூரியரிடம் கொழும்புக்குச் சென்று எப்படியும் அரசாங்க அதிபரைத் திறக்க விடாமல் பிரதி அமைச்சரைத் திறக்கும்படி செய்யுமாறு இரந்தனர். இப்படிப் பிரதி அமைச்சரைத் திறக்கும் படி செய்தால் அமைச்சர் குமாரசூரியரையும் இத்திறப்பு விழாவுக்குஅழைத்து 'நடப்புக்காட்டலாம்' என்று திட்டமிட்டனர். வேலணைக்கு முன் வந்த பொழுது கறுப்புக் கொடி வரவேற்புப் பெற்ற அமைச்சருக்கு இந்த முறை கோலகலமான வரவேற்பை அளிக்க விரும்பினர்கள்.

அமைச்சர் திரு. குமாரசூரியரும் வேலணைக் காரியாதிகாரி அலுவலகத் திறப்பு விழாவில் பங்கு கொள்வார் என்று பத்திரிகைகளில் முழங்கி அடித்தார்கள். அமைச்சர் திரு. குமாரசூரியா வேலணைக்கு வந்தால் கறுப்புக்கொடி காட்டுவதை இடையில் நிறுத்தி வைத்திருக்கும் தமிழர் கூட்டணியின் தீர்மானத்தையும் மீறி அவருக்குக் கறுப்புக்கொடி காட்டப்படும் என வேலணையிலுள்ள வீர இளைஞர்கள் முழங்கினர்.

இந்தச்செய்தி அரசாங்க நிருவாக உள்ளூர் ஆட்சி உண்ணாட்டு அமைச்சுக்கும் முறையாக அறிவிக்கப்பட்டது. அமைச்சர் குமாரசூரியர் வேலணைக்கு வருவது நிறுத்தப்பட்டது. சூழ்ச்சி செய்த தரகர்கள்—மாலைகள் கட்டி வைத்த மானங் கெட்டவர்கள் மண்கவ்வினர்; திறப்பு விழாவுக்கே வராமல் ஓடி ஒதுங்கினர்.

விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பாணியில் தமிழினத்தை விற்றுப் பிழைக்கும் கும்பலைச்சேர்ந்த திருவாளர் அருளம்பலமும் தியாகராசாவும் அல்பிரட் துரையப்பாவும் அழையா விருந்தாக நுழைந்து ஒத்தைழப்புப் பல்லவியைப் பாடிக்கொண்டு அரசாங்கத்துக்கு நல்ல அடிமைகள் தாங்கள் என்பதைப் பிரகடனப் படுத்தினர்.

பாவம்! குமாரசூரியர் தாம் முடியாவிடினும் தனது கையாள்களை அனுப்பி வைத்துத்தான் இத்தொகுதி மக்களுக்குச் செய்யமுயன்ற துரோகத்தை மூடி மறைக்க முனைந்தது பற்றியே வேலணை மக்கள் பேசி சிரிக்கின்றனர்.

### சட்டமறுப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலை நடத்ாது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை அரசு மறுத்து வருவதை ஆட்சேபித்து பெருந்திரளானோர் கலந்துகொள்ளும் ஒரு நாள் உண்ணாவிரதத்தை மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் அக்டோபர் 2ம் நாள் காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை நடத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

● 25-6-72ல் கோப்பாயில் கூடிய தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு அரசாங்கத்துக்கு சமர்ப்பித்த ஆறு அம்சக்கோரிக்கையின் அடிப்படையில் அரசியல் அமைப்பைத் திருத்த அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்காதபடியினாலும்—

● 30-9-72ல் பூர்த்தியான மூன்று மாத கால எல்லைக்குள் மேற் குறிப்பிட்டவாறு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறுமானல் தமிழினத்தின் சுதந்திர உரிமைகளை மீண்டும் பெறுவதற்கும் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழினத்தின் அரசியல், பொருளாதார, கலாச்சார சமுகவாழ்வை அமைத்துக்கொள்ளவும் சாத்விகப் போராட்டத்தில் இறங்குவதென்று அதே நடவடிக்கைக் குழு தீர்மானித்துள்ளபடியாலும்—

● புதிய அரசியல் சட்டம் பற்றி தமிழ் மக்களின் கருத்தை அரசு அறிவதற்கு அரசுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் பொருட்டு தமிழர் கூட்டணித் தலைவர் திரு. செல்வநாயகம் தமது காங்கேசன் துறை உறுப்பினர் பதவியை ராஜினமா செய்து ஒரு வருடமாகியும் அங்கே அரசாங்கம் இடைத்தேர்தலை நடத்தத் தவறியமையினாலும்—

2-10-73இல்லிருந்து சாத்விக சட்ட மறுப்பில் ஈடுபடுவதென தமிழர் கூட்டணி தீர்மானித்து இருக்கிறது

### அவருக்கும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படுக்க இடமின்றி அலையும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

"மந்திரிமார் வந்தால் மாலை மரியாதை செய்யும் சுதந்திரக் கட்சியினர் அதே கட்சி எம்-பி.மார் தெற்கிலிருந்து நல்லெண்ணத்தூதுக் குழுக்களைக் கொண்டு வந்தால்கிட்டவருகிறார்களில்லை வடக்கில் அலுவலகம் அமைத்து சுதந்திரக் கட்சி எதற்காக இயங்குகிறது என்பது இப்போது புரிகிறது"—

## சட்டத்தை ஏன் நாம் மீறுகிறோம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஆறு அம்சத் திட்டமொன்றை தமிழர் கூட்டணி 25-6-72 அன்று சமர்ப்பித்தது. அதனைத் தொடர்ந்து ஜனநாயக ரீதியில் தமிழ் மக்களின் கருத்தை அறிவதற்கு உங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கும் பொருட்டு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது தேசியப் பேரவை உறுப்பினர் பதவியை இராஜினமாச் செய்தார்.

நீங்களும் அரசும் இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தாத காரணத்தினுல் சுயநிர்ணய உரிமைகளின் அடிப்படையில் தமது சுதந்திரத்தையும், உரிமைகளையும் நிலை நாட்ட சாத்விக சட்ட மறுப்பு வழியில் இயங்கவேண்டிய நிலைமைக்கு தமிழ் பேசும் இனம் ஆளாக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் குழந்தைகள் மீது சிங்களம் போதனு மொழியாக திணிக்கப்பட்டதை எதிர்த்து புத்தூரில் திருமுருகன் தமிழ்க் கலவன் பாடசாலையை சட்டமறுப்பாக ஆரம்பித்து தமிழர் கூட்டணி நடத்தி வருகின்றது.

தமிழர் கூட்டணி தொண்டனுகிய நான் தபாற் சட்டத்தின் முத்திரை உபயோகம் பற்றிய விதியை மீறி இக் கடிதத்தை அனுப்புகின்றேன். சட்டத்தின் தண்டனையை நான் ஏற்பதால் சிங்கள மக்களின் மனச்சாட்சி மலரும் என்று நம்புகின்றேன். தமிழ் இனத்தின் உரிமைப் பிரச்சினைகளை தீர்ப்பதாலேயே நாட்டின் பொருளாதார நெருக்கடியை எல்லோரும் ஒன்று பட்டு உழைத்துத் தீர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் சூழ் நிலை உருவாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இங்ஙனம்,
தங்களின் உண்மையுள்ள,

..............................

என்று குறிப்பிட்டு [illegible] முடியும் இக்கடிதத்தில் சட்ட மறுப்பில் [illegible] வரியையும் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

### 'குமணனுக்கு' மீண்டும் தங்கப் பதக்கம்

16-9-73ல் வல்வெட்டித்துறை கம்பர் கழகத்தினரால் நடாத்தப்பட்ட வருடாந்த நாடகப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த நாடகங்களில் புத்தூர் அற்புதாலயா கலாமன்றத்தினரின் குமணன் என்னும் வரலாற்று நாடகமே முதலாவது இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைத் தட்டிக்கொண்டது.

இதில் முக்கிய பாத்திரத்தில் நடித்தும் இயக்குனராகவும் இருந்து முழுக்க முழுக்க பழைய நாடகப் பாணியிலேயே தயாரித்திருக்கிறார் கலைஞர் என். நிச்சார்ட். இந்நாடகத்தின் வெற்றிக்கு கலைஞர் எம். அற்புதசிங்கம் குழுவினரின் காட்சி அமைப்பு கைகொடுக்கின்றது. கடந்த 15-9-73ல் குரும்பசிட்டியில் நடாத்தப்பட்ட நாடகப்போட்டியில் இந் நாடகம் 2ம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

### காசி ஆனந்தன்
### வண்ணை ஆனந்தன்
### சிறையில் இன்று
## 486-வது நாள்

ஆடம்பரம்

"திருநாள், பெருநாள், கருநாட் செலவைச் சுருக்கு தொகையைத் தொழிலாக்கு, பலர் உழைத்துப் பிழைக்க வழிசெய்."

—சுவாமி சுத்தானந்த பாரதியார்.

15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி உரையுடன் கூடிய நல்வழி என்ற புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்**

**ஆவலுடன் எதிர்பார்த்த ஆதரவாளர்களுக்கு**
**இதோ ஒரு நற்செய்தி**
**சுஜிகலா**
**தீபாவளி வாழ்த்து மடல்கள்**

மலையெனக் குவித்துள்ளோம் அலையெனத் திரளுவீர், கண்ணைக் கவரும் வண்ணங்கள்—எண்ணத்தைக் கவரும் கருத்துக்கள்—அத்தனையும் முத்தாக இடம் பெற்றுள்ளது.

| நிர். | அளவு | 100க்கு | டசின் |
| --- | --- | --- | --- |
| 1. லித்தோ படங்களுடன் கவருடன் | 10X7 | 50/- | 8-00 |
| 2. இரு மடிப்புக் கார்ட் | 6X4 | 16/- | 2-50 |
| 3. புதிய முறையில் அஞ்சலட்டை | | 10/- | 1-75 |
| 4. இலங்கை மெப்பின் கட்டிங் கார்ட் | 8X4 | 60/- | 9-00 |
| 5. புதிய தயாரிப்பான இரு கோடுகள் | 7X5 | 45/- | 7-50 |
| 6. வார்ணிஷ் படங்கள் | 11X8 | 70/- | 12-50 |
| 7. D. M. மஞ்சுளா வார்ணிஷ் | 8X6 | 40/- | 6-50 |
| 8. மினி கார்ட் பாக்கெட் சைஸில் | | 11/- | 2-00 |

அழகிய முகப்புப் படங்களுடன் கூடிய கவர்களுடன் பெறலாம். உங்கள் ஆடர்களை இன்றே எழுதுங்கள். வி.பி.பி.மூலம் பெறலாம்

தயாரிப்பாளர்;-
**சுஜிகலா இன்டஸ்ட்ரீஸ்,** கொழும்பு-14.

ஏக விநியோகஸ்தர்கள்:-
**சிவசக்தி ஸ்டோர்ஸ்.**
135, செட்டியார் தெரு, கொழும்பு-11.

கொழும்பு நகர சில்லறை விற்பனையாளர்கள்:
மலர்விழி ஸ்டோர்ஸ், கொழும்பு-11.
● சாந்தி ஸ்டோர்ஸ் கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வன்னியர் காட்டிய பாதையிற் சென்று தனியரசு அமைப்போம்!'

## அமரர் நினைவுதினக் கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் பா.உ. முழக்கம்!

'மீண்டும் தனி அரசு அமைத்து நாம் அதில் தன் மானத்துடன் வாழ அமரர் வன்னியர் காட்டிய பாதை யிற் செல்வோம் —'

—இவ்வாறு கந்தரோடை யில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவுதினக் கூட்டத்தில் பேசிய தமிழ் காங்கிரஸ் உறுப்பினரான கிளிநொச்சி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி மேலும் பேசியதாவது:-

'தமிழினத்தின் விடுதலைக் காகப் பாடுபட்ட அமரர் வன்னியசிங்கம், அந்த இனம் விடுதலையடைய முன்னரே அமரராகிவிட்டார். தமிழர சுக்கட்சியினருக்கு மட்டுமே சொந்தமாக இருந்த வன் னியசிங்கம் இன்று தமிழினத் தின் ஏகபோகச் சொத்தாகி விட்டார்.

கடந்த காலங்களில் ஒரு வருக்கு ஒருவர் விட்டுக் கொடாது தமிழரசாரும், காங்கிரசாரும் திட்டி வந் தோம். ஆனால் இன்று தமிழர் கூட்டணியினராக ஒரே கொடியின் கீழ் வந்துள் ளோம். கட்சிபேதம் இன்றி தமிழினம் வாழுகிறது. தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும் என்ற இலட்சியத் தில் வாழ்ந்தவர் வன்னியர்! அவரது இலட்சியம் இன்று ஈடேறி விட்டது.

தமிழினம் இன்று எமக்குத் தேவை 'தனி நாடே' என்ற நிலைமைக்கு வந்து விட்டது. ஆமாம் தமிழன் இந்நாட் டில் சுதந்திரமாக தனித்துவ மான இனமாக வாழ வேண்டுமானால் 'தனியாட் சியே' தேவை.

சலுகைகளுக்காக எம் இனத்தை நாமே காட்டிக் கொடுத்து வாழாது, எமது உரிமைகள் கிடைக்க சாத் வீகமான முறையில் எமது போராட்டத்தை நடத்த வேண்டும். மீண்டும் தனி அரசு அமைத்து நாம் அதில் தன்மானத்துடன் வாழ வன்னியர் காட்டிய பாதை யில் செல்வோமாக.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசியதாவது:-

'இலங்கைத் தமிழர் இன் னல்களை தமிழ் நாட்டுக்கு முதலில் கொண்டுசென்றவர் அமரர். வன்னியசிங்கம் இன்று முக்கிய பதவி யில் இருக்கும் மத்திய அர சின் அமைச்சர் சுப்பிரமணி யம் உட்பட தமிழ் நாட்டின் பல்வேறு தலைவர்களிடமும் 1957ம் ஆண்டில் எமது நிலை மையை விளக்கியிருந்தார்.

இலங்கையிலுள்ள பிரச் சினை இரு தேசிய இனங்களுக் கிடையேயான பிரச்சினை. ஒரு தேசிய இனத்தை, அது சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக அடக்கி ஆளும் ஏகாதிபத் திய முறை இங்கே இருக்கி றது, இந்த இரு இனங்களுக் கிடையேயான பிரச்சினை களைத் தீர்த்துவைக்க வேண் டியது உலக நாடுகளின் கடமை. அதன் முதற்படியா கவே தமிழ் நாட்டின் ஆத ரவை நாம் நாடி நிற்பது.

இப்படி நாம் தமிழ் நாட் டின் ஆதரவை நாடி நிற்பது பலருக்கும் அதிர்ச்சியை அளித்துள்ளதாகத் தோன்று கிறது. அடிமைப்பட்ட இனம் தான் விடுதலை பெறுவ தற்கு எவரின் உதவியையும் நாடுவது இயல்பு. இப்போது தான் கண்விழித்தவர்கள் போல வெளிநாட்டின் தலை யீட்டைக் கோராமல் இங்கே பேசித்தீர்க்கவேண்டுமெனச் சிலர் சொல்ல முன் வந்துள் ளனர். நாம் எப்பொழுதா வது அரசுடன் பேச மறுத் தோமா? பல முறை பேசி னோம்; ஒப்பந்தங்கள் கூட எழுதினோம். பொறுப்பு வாய்ந்த சிங்களத் தலைவர் கள், தாம் செய்த ஒப்பந்தங் களை நிறைவேற்ற முடிய வில்லை.

ஆயினும் இப்போதும் கூட சமாதானப் பேச்சுக்கள் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்க்க நாம் தயாராகவே உள்ளோம். ஆனால் இதய சுத்தியோடு இரு இனத்தவர் களும் ஒருவரை ஒருவர் மதித்து பேச்சுவார்த்தை நடாத்த முன்வரவேண்டும். அதை ஆரம்பிக்கவேண்டிய வர்களும் ஆட்சிபீடத்திலே உள்ளவர்களேயன்றி நாம் அல்ல'

திவுப்பகுதி பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் தமது உரையின்போது குறிப்பிட்ட தாவது:-

'சிங்களமொழிதோன்ற முன் ஆண்டுகொண்டிருந்த இனம் தமிழினம். ஆனால் அந்த இனம் இன்று ஈழத் தில் முற்றுமுழுதாக அடிமை யாக்கப்பட்டுள்ளது. அமரர் வன்னியசிங்கம் போன்ற தன்னலமற்ற தியாகிகள் தமிழினத்திடையே நூற்றுக் கணக்கானவர்கள் தோன்றி யிருத்தால், இன்று நாம் எம்மை ஆண்டுகொண்டிருப் போம்.

'செல்வாபோல் வன்னிய ரும் தமிழினம் அடிமைப் படுத்தப்படும் என உணர்ந் தார். அவர் கூறியதுபோல் இன்று நடந்துவிட்டது. இன்று ஆட்சி பீடத்திலுள் ளோருக்கு வரவேற்புக் கொடுப்போர் எந்த உரிமை யையும் பெறவில்லை. சில அற்ப சலுகைகளைத்தான் பெற்றுள்ளார்கள். எம் மிடத்தேயுள்ள எட்டப்பர் களை பயன்படுத்தி தமிழினத் தைப் பிளவுபடுத்த அரசு 'சதி' செய்கிறது.

தமிழினம் அடிமைப் படுத் தப்பட்டு மூலையில் கிடக்கும் வேளையிலும் எமக்கு உரிமை கிடைக்கும் எனச்சொல்லி ஏமாற்றப் பார்க்கிறார்கள். ஆளும் இனத்தை அண்டிப் பிழைத்து எந்த சிறுபான் மையினரும் தமது உரிமை களைப்பெற முடியாது என் பது உண்மை. தமிழரசுக் கட்சி அழிந்துவிட்டது என் கிறார் இலங்கரத்ன! இவர் கள் மூலம் தமிழினம் தமது உரிமைகளைப்பெற முடி யாது. சுதந்திரமுள்ள தனி ஆட்சியை நாம் அமைப் போம். அதற்கு நம்மை நாமேதயார்படுத்துவோம்'

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில்: 'உலகத்திலே பிறப்பவர் எல் லாரும் இறக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் நினைவு தினத்தையும் நாம் கொண் டாடுவதில்லை. இறந்தும் இறவாப்புகழ் பெற்றவர் களைத்தான் நாம் நினைக்க வேண்டியுள்ளது. அவர் களது நினைவு தினங்களைக் கொண்டாட வேண்டியுள் ளது. அந்த இறவாப் புகழ் பெற்றவர்களில் ஈழத் தமிழி னத்தில் முதன்மையானவர் அமரர் வன்னியர். தனது துணைவியாரையும் அரசிய லிலே ஈடுபடவைத்தார். திருமதி வன்னியசிங்கம் அர சியலிலே ஈடுபட்டிருக்கா விட்டால், நானும் அரசிய லில் இறங்கவேண்டி வந்தி ராது'' என்றார்.

---

# இலங்கைத் தமிழருக்கு நீதிகிடைக்க இந்திய அரசு என்ன செய்யலாம்?

## சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய வேண்டுமென்கிறது 'தினமணி'!

'உரிமைப் போராட்டம்' என்ற தலைப்பில் இலங்கை தமிழர் பிரச்சினை பற்றி சென்னையிலிருந்து வெளி வரும் தேசிய நாளேடான 'தினமணி' 14-9-73ம் திக தி இதழில் தீட்டியுள்ள ஆசிரியத் தலையங்கம் வரு மாறு:—

இலங்கைத் தமிழர்கள் வேறு வழியின்று உரிமைப் போராட்டத்தில் இறங்கி யிருக்கிறார்கள். பாராளுமன் றத்திலும் வெளியிலும் நியா யம் கேட்டுப்பார்த்தும் நல் லாம் பலிக்கவில்லை.

'பெரும்பான்மை பலம் இருப்பதால் சிறுபான்மை மக்களை துச்சமாக மதிக் கின்ற மனப்பான்மை ஆட்சி யாளரிடம் வளர்ந்திருப்பது மிகமிக வருந்தத்தக்கது.

'பிற முறைகள் பயனற்றுப் போகவே ஆட்சியாளருக்கும் சிங்கள மக்களுக்கும் மன மாற்றம் ஏற்படச் செய்யும் நோக்குடன் காந்திய வழி யில் 50 நாளை உண்ணாவிரத இயக்கத்தை தமிழ் சமுதா யத்தின் நலனுக்காக உழைக் கும் தமிழரசுக்கட்சி மேற் கொண்டிருக்கிறது.

'தமிழர்கள் அவசரப்பட்டு நட வடிக்கையில் இறங்கிவிட்டதாக புகார் சொல்ல இடமேயில்லை. தமது கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதின சங்காகிவிடவே சிங்களர் மட்டுமன்றி உலக மக் களும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் சத்தியாக்கிரகத்தை அவர்கள் மேற்கொள்ள வேண் டியதாயிற்று.

'இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரில் பெரும் பாலோர் தமிழர்கள் எனவே இந்தியர்களின் குறைகள் என்பன அங்குள்ள தமிழ் சமுதாயத்தின் குறைகள் தாம். அவர்களது கோரிக் கைகளை உலகமறியும்.

'ஓட்டுரிமை உள்ள இந்தி யர்களைக்கூட இரண்டாந் தரப் பிரஜைகளாகக் கருதி சம உரிமைகளை நடைமுறை யில் இலங்கை அரசு மறுத்து வருகிறது. அவர்களுக்கு உள்ள வில்லங்கங்கள் ஏரா ளம் அவர்களது கோரிக்கை கள் மிக நியாயமானவை.

'இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தாம் தமிழர் அதிகமாக வசிக்கி றார்கள். எனவே அப்பகுதி களை பேருக இணைத்து ஒரு 'பெடரல்' அமைப்பை (சமஷ்டியை) ஏற்படுத்த வேண்டுமென்பது நெடு நாளைய கோரிக்கை. அது ஏற்கப்படவில்லை யாதலால் பெடரல் கட்சியின் பெயரை தமிழ் அரசுக்கட்சியென்று மாற்றி தமிழர் வாழ் பகுதி களுக்கு சுயாட்சி உரிமையை இப்பொழுது வற்புறுத்தி வருகின்றனர்.

'உண்ணாவிரதத்தை மேற் கொண்டது எந்தக் கோரிக் கைகளின் அடிப்படையில் என்பது தெளிவாக்கப்பட் டுள்ளது.

(1) சிங்களத்தைப் போ லவே தமிழுக்கும் சம உரிமை வேண்டும்.

(3) புத்த மதத்துக்குள்ள பாதுகாப்பு ஹிந்து சயமத் துக்கும் கிடைக்க வேண்டும்.

(3) பல்கலைக் கழகங்களில் தமிழரைச் சேர்ப்பதில் உள்ள பாகுபாடுகள் நீங்க வேண்டும்.

(4) மலைத்தோட்டத் தொழிலாளர், தேசத்தின் எப்பகுதியிலும் குடியேறி வசிப்பதற்கு உரிமை வேண் டும்.

(5) விசாரணையின்றி காவ லில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய வேண்டும்.

''மேலே விபரித்த கோரிக்கை களில் எதுவும் மிகையானது என்று யாராலும் சொல்ல முடி யாது. அவற்றுக்குச் செவிசாய்க்க அரசு மறுக்கவே சுவித்சர்லாந்தி லுள்ள சர்வதேச நீதி நிபுணர்க் கமிட்டியையும் பெடரல் கட்சி யினர் அணுக வேண்டிய தாயிற்று.

''ஐ. நா. மனித உரிமை [illegible] விரோதமாக சிறுபான்மை யினரை இலங்கை அரசு கொடுமைப்படுத்தியும், பாகு பாடுகளுக்கு உள்ளாக்கியும் வருவதைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கை போயிருக்கிறது.

''மற்றொரு புகாரும் செய்யப்பட்டுள்ளது. சட்ட மியற்றியும் நிர்வாக நடை முறைகள் மூலமாகவும் தமி ழர்களின் பிரஜாவுரிமையை மறைமுகமாகப் பறிக்கும் முயற்சிகளும் உருவாகி வரு கின்றன என்பது மற்றொரு குற்றச்சாட்டு. இதுவும் நுண் ணிய பரிசீலனைக்கு உரிய விஷ யமே.

''பிரஜாவுரிமை மனுச் செய்து கொண்டுள்ள ஏராள மான இலங்கை வாழ் இந் தியர் விஷயம் நியாயமாகத் தீரவேண்டும் என்பதில் பொது அக்கறையும், உடன் படிக்கை பூர்வமாகப் பொறுப்பும் நமது அரசுக்கு இருந்து வருகின்றன.

''சாத்திரி—சிறிமாவோ உடன் படிக்கையை இலங்கை அரசு உண்மை உணர்வுடன் அமுல் நடத்தவில்லையென்பது மற்றொரு புகார். தகுதியுள்ள எல்லா மனுக்களையும் ஒருசேர ஏற்றுக்கொண்டு பிரஜாவுரிமை வழங்கச்செய்வதை நமது அரசு வற்புறுத்தவேண்டிய அவசியம் இருப்பதாகவே தோன்றுகிறது.

''இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கையில் — அங்குள்ள தமிழ்சமுதாயத்தின் கோரிக் கைகளையும் கவனித்து நேசப்பான்மையில் மனிதாபி மான வுணர்வுடன் நியாயம் வழங்கச் செய்யுமாறு நமது அரசினர் சாத்திய மற்ற முறையில் கேட்டுக்கொள் வதன் சாத்தியக் கூறுகள் பரிசீலனைக்கு உரியன.''

### அவருக்கும் புரிகிறது!

தமிழ்ப்பகுதியில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி யென்ற லேபலுடன் திரி கின்ற சில துரோகிகள்— வெறும் வயிற்றுப் பிழைப் புக்காகவும், அற்ப சலுகை களுக்காகவும், எலும் புத் துண்டுக்குமாகவே அந்த வேஷம்போட்டு குலைத்துக் கொண்டு திரிகிறார்கள் என் பது நாடறிந்த இரகசியம். இந்த இரகசியத்தை அதே கட்சியைச்சேர்ந்த சிங்களப் பா. உ.வான திரு. தனபால வீரசேகரா அவர்களே யாழ் பாணத்துக்கு அண்மையில் சென்றிருந்த போது அனுப வம் மூலமாக அறிந்து கொண்டு விட்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி லேபலில் திரியும் தமிழ்த் துரோகிகள் தமிழினத்துக்கு மட்டுமன்றி சிறிலங்கா சுதந் திரக்கட்சிக்கே கூட துரோகி கள் என்பதை திரு. தன பால வீரசேகராவே யாழ்ப் பாணத்தில் வைத்து அம்ப லப்படுத்தியிருக்கிறார் அதை இதோ படியுங்கள்!

''இங்கு சில ஏமாற்றங் களும் எனக்குக்கிடைத்தன. இவை தமிழ் மக்களாலோ, தமிழ் அரசியல் தலைவர் களாலோ ஏற்பட்டதல்ல. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகளாலும அவற்றின் தலைவர்களாலுமே எமக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. எம்மைவரவேற்பதாக அவர் கள் முன்கூட்டியே வாக்குறு தியளித்தனர். யாழ்ப்பாணத் துக்கு நாம் வந்து சேர்ந்த தும் அவர்களில் யாரையுமே காண முடியவில்லை.

''சுதந்திரக் கட்சி உறுப் பினர் என்ற முறையில் இவர் களையெல்லாம் நாம் சந்திக்க விரும்பினேன். யாரும் வாய்ப்பு ஏற்படுத்தித்தர வில்லை. இங்கு வந்த அன்றே

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் தொகுதியில் தமிழர் பாசறை [2]

தமிழரசுக் கட்சியின் பன்னிரண்டாவது மாநில மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள் செப்டம்பர் 7ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விடயாலோசனைக் கூட்டத்துடன் ஆரம்பமாகியது.

இதில் கலந்துகொள்வதற்காக மல்லாகத்தை நோக்கி பேருந்து வண்டியொன்றில் சென்றுகொண்டிருந்தேன்.

நம்முடைய 12வது மாநாட்டைகாங்கேசன்துறைத் தொகுதியில் நடத்துவதென்று கட்சி எதற்காக முடிவு செய்தது! அதற்கு என்ன காரணமாக இருக்கும்? என்பதைப் பற்றி அப்போது எனக்குள்ளே பலவாறு அசைபோட்டுப்பார்த்துக் கொண்டிருந்தேன்.

காங்கேசன்துறைத் தொகுதி பல வழிகளிலும்—தமிழரசுக் கட்சியின் வரலாற்றிலும், தமிழ் தேசிய இனத்தின் வரலாற்றிலும் — அதிமுக்கியத்துவமும் சிறப்பும் கொண்டுள்ள ஒரு தொகுதியாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்குவது பற்றிய பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் முதன் முதலாக 1949ம் ஆண்டு நடைபெற்றது காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள மாவிட்டபுரத்தில்தான்! மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வீதியில்தான் தமிழரசுக் கட்சிக்கு ஆரம்பத்தில் முதல் விதை யூன்றப்பட்டது!

இன்று தமிழ் தேசிய இனம் நடத்திவருகின்ற விடுதலைப் போராட்டத்தின் எழுச்சி நாதமாக — உரிமை உணர்வின் மூல வித்தாக—தமிழர் விடுதலை உணர்வின் பிரதிபிம்பமாக—தமிழ் சமுதாயத்துக்கு கிடைத்துள்ள ஈடிணையற்ற பொக்கிஷமாக — இருந்துகொண்டிருக்கும் பெரியவர் தந்தை செல்வா அவர்களை ஈன்றெடுக்காவிட்டாலும், வளர்த்து உருவாக்கி, தமிழர் சமுதாயத்துக்கு வழங்கியது காங்கேசன்துறை மண்தான்!

கோப்பாய்க் கோமான்—கொள்கை மறவர்களின் பூமான் — தமிழ்க் குலம் காக்க வந்த தியாகத் திருமகன்—ஈழத் தமிழகத்தின் இலட்சியத்திருவிளக்குதமிழரசு இயக்கத்தின் திசையறிகருவி—அமரர் வன்னியசிங்கம் அவர்களை ஈன்றெடுத்து தமிழ் சமுதாயத்துக்கு வாரி வழங்கியதும் காங்கேசன்துறைத் தொகுதிதான்!

இவை மட்டுமல்ல-இன்றைக்கு தமிழ் நாட்டிற்கும் எமக்குமிடையேயிருந்துவருகின்றதொன்மைமிக்க மொழி கலாசார, இலக்கிய, இன, மத ஒருமைப்பாட்டினையும் உறவினையும் தகர்த்தெறிந்திட சிங்கள ஏகாதிபத்தியம் பலவழிகளையும் கையாண்டு பார்த்துவருகின்ற நிலையில்—தமிழ் நாட்டுக்கும் தமிழ் ஈழத்துக்குமிடையேயுள்ள நெருக்கமான பிணைப்பை துலக்கமாக எடுத்துக்காட்டிக் கொண்டிருப்பதும் காங்கேசன் துறைத் தொகுதிதான்!

அங்குள்ள கீரிமலைத் தீர்த்தமும், தமிழ் நாட்டுக் கோவில்களுக்கு ஈடுசொல்லக்கூடியதாய் உயர்ந்து நிற்கும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ராஜகோபுரமும் தமிழ் நாட்டுக்கும் நமக்கு மிடையேயுள்ள கலாசார, மத, இன, மொழித் தொடர்புகளை என்றென்றும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும் சின்னங்கள் அன்றோ!

'காங்கேசன்' துறை என்ற பெயரே தூயதமிழ்ப்பெயர். 'காங்கேயன்' தமிழ்த் தெய்வமாம் திருமுருகனின் பல பெயர்களில் ஒன்று அத்தகைய தமிழ்த் தெய்வம் திருமுருகனின் திருவுருவச் சிலை தமிழ் நாட்டிலிருந்து வந்து இறங்கிய துறையாதலால் தான் காங்கேயன்துறைக்கு அப்பெயர் வந்ததெனக் கூறிடுவர் வரலாறு அறிந்தோர்.

தமிழ் ஈழத்தில் விளைகின்ற உணவுப்பொருட்களையும் ஏனைய பண்டங்களையும் ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறை துறைமுகத்திலிருந்து தமிழ் நாட்டுக்கும் ஏனைய நாடுகளுக்கும் வணிகக் கப்பல்கள் சென்று கொண்டிருந்த தமிழ் ஈழத்தின் பொற்காலத்தை யார்தான் மறக்கமுடியும்? அத்தகைய பொற்காலத்தை மீண்டும் கண்டிட விரைகின்ற விடுதலை வீரர்கள் கோட்டமான தமிழரசு வீரர்கள் காங்கேசன்துறையில் பாசறை அமைத்திட முடிவுசெய்தது முற்றிலும் பொருத்தமானதே!

இப்படி தமிழ் நாட்டுக்கும் எமக்குமிடையேயன்னெடுங்காலமாக இருந்துவரும் தொடர்புக்கும் உறவுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவதால் மட்டுமல்ல— இன்றைய அரசியல் முக்கியத்துவத்திலும் காங்கேசன் துறை உலகத்தின் கண்கள் அனைத்தும் படிகின்ற ஒரு கேந்திர ஸ்தானமாக மாறிவிட்டது!

புதிய அரசியல் சட்டத்தை முன் வைத்து ஆட்சியாளர்களுக்கு சவால் விடுத்து தமிழர் தந்தை செல்வா அவர்கள் பதவி விலகியுள்ளதன் காரணமாக கடந்த ஓராண்டாக இடைத்தேர்தல் ஒன்றை எதிர்நோக்கிருப்பதால் உலக நாடுகளின் அனைத்தும் கண்களை அகலவிரித்தபடி இன்று காங்கேசன்துறை தொகுதியை நோக்கியே இமைக்காது பார்த்தபடி இருக்கின்றன.

இத்தகைய முக்கியத்துவம் பெற்ற காங்கேசன்துறைத் தொகுதிதான் — இன்றைக்கு சிறையிலே சொல்லொணா வேதனைகளையும், சித்திரவதைகளையும், அடிகளையும் உதைகளையும் ஏற்றுக்கொண்டு — தான் ஏற்றுக்கொண்ட கொள்கையிலிருந்து கிஞ்சிற்றும் வழுவாது புதுய தியாக வரலாறொன்றை உருவாக்கி வருகின்ற செந்தமிழ்க்காளை சேனாதிராஜாவை ஈன்றெடுத்ததொகுதியுமாகும்!

சுழன்று சுழன்று பணியாற்றும் நம் இயக்கத்தின் தூயதொண்டன்; தமிழர் தந்தை செல்வாவின் சிந்தை கவர்ந்தோன்; எல்லோருடனும் இனியவே பேசும் எளிமையாளன்; இளைய சமுதாயத்தின் புதிய தலைவனாக விளங்கக் கூடிய ஆற்றலைப் பெற்றிட இன்று சிறைச்சாலையிலே தவம்செய்து வருபவன்; சேனாதிராசா எனும் செந்தமிழ் வீரனைப் பெற்றெடுத்த தாய் ... உயர்ந்தோங்கி ... கிறது காங்கேசன்துறைத் தொகுதி!

இத்தகையதோர் முக்கியத்துவம் வாய்ந்த தொகுதியில் — முதல் மூன்று நாள் நிகழ்ச்சிகளும் — மல்லாகம் சந்தியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சிக்கிளை அலுவலகத்தின் அருகே—இதற்கென நிர்மாணிக்கப்பட்ட பிரமாண்டமான கீற்றுக்கொட்டகையின் கீழ் நடைபெற்றன.

இதோ — பேருந்து வண்டி சடாரென நிற்கிறது.

ஓ... மல்லாகம் சந்தி வந்துவிட்டது — வண்டியிலிருந்து இறங்கினேன்.

மல்லாகம் என்றதும் நம் இயக்கத்தினர் கண்களில் எல்லாம் ஒரேயொரு உருவம்தான் தோன்றும்! கண்ணைடிபார்க்கக்கூடியதான மொட்டந்தலை; அந்த மொட்டந்தலையில், 1953ம் ஆண்டு அப்போது பிரதமராயிருந்த சேர் ஜோன் கொத்தலாவலைக்கு கறுப்புக்கொடிகாட்டிய போது பொலிசாரினல் பட்ட காயத்தின் தழும்பு; மொட்டந்தலையின் கரையோரமாக ஐந்தாறு நரைமயிர்கள்; கொள்கை யுறுதியைக்காட்டும்வட்டமுகம்; அறுபதுவயதிற்கு அதிகமானாலும் ஆஜானுபாகுவான தோற்றம்; கணீர் என்று வெங்கல நாதம் எழுப்பும் சிங்கத்தொனி; எடுப்பான

**எஸ். ஆர். எம்.**

நடை; கபடமற்ற மனத்தை காட்டும் கனிவான குறுஞ்சிரிப்பு — இத்துடன் காட்சி தருகின்ற அந்த உருவத்தின் பெயர்தான் வழக்கறிஞர் சு. நடராசா!

கட்சியின் ஸ்தாபகத்தலைவர்களில் அவர் ஒருவர்; 1949ம் 50ம் ஆண்டுகளில் — கட்சி தொடங்கப்பட்ட நாட்களில் என்னென்ன தொல்லைகளைத் தாங்க வேண்டி ஏற்பட்டதோ — அவற்றுக்கெல்லாம் தானும் சேர்ந்து தோள் கொடுத்து வந்தவர்—இன்றைக்கும் வருபவர் அன்பர் நடராசா.

கட்சியால் தனக்கென்ன இலாபம் என்று கணக்குப் போடாது தன்னல் கட்சிக்கு என்ன இலாபம் என்று எண்ணிப்பார்த்து செயல்படுகின்ற திண்மை உள்ளம் நடராசாவினுடையது.

அவர்மீது நான் வைத்திருக்கின்ற பெருமதிப்புக்கு காரணம் — அவரது உரமான இலட்சியப்பற்றுத்தான்! அறுபது வயதைத் தாண்டிய பின்னரும் இன்றும் கடுந்தீவிரவாதியாக அவர் காணப்படுவதைப் பார்த்துப்பெருமைப்படும் அதே வேளையில் நம் இயக்கத்திலுள்ள அவரைவிட இளைய வயதினர் சிலர் ஓய்ந்து ஒதுங்கி உறங்குவதைக்கண்டு வேதனைப்பட்டிருக்கிறேன்.

கட்சியின் ஆரம்ப நாட்களில் 'தமிழரசு' என்ற ஏட்டை அவர் நடத்தி வந்த காலம் இன்னும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கின்றது ... முதலமைச்சர் அவர் உதவி ஆசிரியராக இருந்த காலத்தில் அவர் விடுத்த சொல்லம்புகள் எதிரிகளின் இடுப்பொடித்திருக்கின்றன. அவரது வாதத்திறமையை — இந்நாட்டுப்பத்திரிகைகள் பல பாராட்டியுமிருக்கின்றன.

அண்மையில்ஓர் அமைச்சர் வடக்கே போயிருந்தார். மல்லாகம் சந்தியில் வைத்து அந்த அமைச்சருக்குகறுப்புக்கொடி காட்டப்பட்டது. இதை நடத்தி முடித்தவர் திரு. நடராசா என்பதை அறிந்த அமைச்சர் திரு. நடராசா அவர்களைவாய்க்கு வந்தபடி திட்டித்தீர்த்தார். "நடராசா ... நடக்காத ராசா" என்று என்னென்னமோ பண்பை இழந்து அவர் பேசித்தீர்த்தார்.

அமைச்சர் கூறியபடி அன்பர் நடராசா, நடக்காத ராசாவாகவோ வேறு எந்த ராசாவாகவோ இருந்தாலும் — ஒன்று மட்டும் நான் உறுதியாகக் கூறுவேன்—அவர் எந்த இடத்திலுமே நடிக்காத ராசா!

கட்சிக்குள்ளும்சரி—வெளியேயும் சரி -தனது மனதில் தோன்றும் கருத்துக்களை உணர்ச்சிவசப்பட்டு அப்படியே கக்கிவிடுவார். உள்ளத்தில் ஒன்று உதட்டில் மற்றொன்று அவரிடம் கிடைக்காத ஒன்று!

இந்தப் போக்கு சில வேளைகளில் சிலருக்கு பிடிக்காமல் போனாலும் — யாருக்கும் தீமை விளைவிக்காத நல்ல



இவர் நடராசா அல்ல —
"நடிக்காத ராசா"

போக்கு இது என்றே நான் கூறுவேன்!

இத்தகைய இலட்சியவாதியான அன்பர் நடராசா அவர்கள்தான் நம்முடைய 12வது மாநில மாநாட்டுச் செயலாளர்!

அதோ, தமிழரசுக்கட்சியின் மூவர்ணக்கொடிகளும் தமிழ்த் தேசிய இனத்தின் கொடியான உதயசூரியன் கொடிகளும் ஆங்காங்கே அசைந்தாடி நம்மை வரவேற்கின்றன.

மாநாட்டு அலுவலகத்துள் நுழைகிறோம் தமிழினத்தின் பண்பாடு எத்துணை பழமையானதோ அதேபோல பழைய பாணியில் பழைய முறையில் காலத்தால் மூத்ததாக அமைந்திருந்தது அந்த இல்லம்!

சோசலிசம் பேசுகின்றவர்களின் கட்சிகள் எல்லாம் ஏழைகளின் பணத்தைச் சுரண்டி மாளிகை போன்ற அலுவலகங்களை சொந்தமாக கட்டி வைத்திருக்கும் இந்த நாட்டில் முதலாளித்துவக் கட்சியென ஒரு சிலரால் வர்ணிக்கப்படுகின்ற நமது கட்சியின் மாநாட்டு அலுவலகம் ஒரு மிகப்பழைய சாதாரண வீடு! ஆம்—நமது கட்சிதான் ஏழைகளின் கட்சி; இல்லாதவர்களின் கட்சி; உண்மையான சமதர்மக் கட்சியென்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது அந்தப் பழைய வீடு — அதாவது மாநாட்டு அலுவலகம்!!

இந்த மாநாட்டிற்குத்தான் முன்னெப்பொழுதையும் விட மலையகத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான பிரதிநிதிகள் வந்து குவிந்திருந்தனர்! அட்டன், தலவாக்கொல்லை, ருகன், பொகவந்தலாவ, மஸ்கெலியா, பதுளை, பசறை, நுவரெலியா, உடப்புசல்லாவ, அக்கரப்பத்தனை, ஆகிய எழில் கொஞ்சும் மலையகத்தின் பலபாகங்களிலிருந்தும் தமிழரசு மாநாட்டில் கலந்துகொள்ளவென திண்டோள் மறவர்கள்—திரமிகு திராவிடர்கள்— இலங்கைத் தொழிலாளர் கழக உறுப்பினர்கள் திரண்டு வந்திருந்த காட்சி என்றும் மறக்கமுடியாத காட்சியாகும்!

வடக்கும், கிழக்கும், மலையகமும் யாராலும் பிரித்திட முடியாதபடி இணைந்துவிட்டது என்பதை இது யாவருக்கும் எடுத்துக் காட்டியது.

கலகலப்பாககாணப்பட்ட இந்த மாநாட்டு அலுவலகத்தின் ஒரு புறத்தேயுள்ள அறையில் தமிழரசு மாநாட்டை யொட்டிய விடயாலோசனைக்குழுக் கூட்டம் அப்போது நடைபெற்று கொண்டிருந்தது. அந்தக் காட்சி—இந்திய தேசிய காங்கிரஸ் காரிய கமிட்டிக் கூட்டம் சுதந்திரப்போராட்டம் நடைபெற்ற காலத்தில் சூடும் சுவையும் நிறைந்து எப்படி விறுவிறுப்பாக நடைபெற்றிருக்குமோ - அதையே எனக்கு நினைவூட்டிற்று!

கட்சியின் புதிய தலைவர் நாவலர் அமிர் அவர்கள் மூவர்ணத்துண்டுஒன்று கழுத்தில் அலைபுரள — நிலத்தில் உட்கார்ந்து தம்எதிரேயுள்ள மூவண்ணம் பூசப்பட்ட சிறிய குட்டி மேசையொன்றில் வைத்து எதையோ எழுதிக்கொண்டிருக்கிறார்; அருகே அவரது துணைவியார் திருமதி மங்கையர்க்கரசியும், திருமதி இராசபூபதி அருணாசலமும் வீற்றிருக்கின்றனர்: அதோ பெரியவர் செல்வா மட்டும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார், கிழக்கின் பெருந்தலைவர் இராசமாணிக்கனார் செந்தமிழ் செல்வர் இராசதுரை, சிம்மக்குரலோன் செல்லத்தம்பு, யாருக்கும் தலைவணங்கா நேமிநாதன், இஸ்லாமியத் தமிழன்பன் உதுமான் லெப்பை, மூதூர்த் தங்கம் தங்கத்துரை, இவர்களுடன் வடக்கின் தலைவர்களும், தமிழ் ஈழத்தின் அனைத்துப குதிகளிலிருந்தும் திரண்டு வந்திருந்தகட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களும் பொலிவுடன் வீற்றிருக்க — தமிழ் தேசிய இனத்தைப் பூரணமாகபிரதிநிதித்துவப்படுத்திய விடயாலோசனைக் கூட்டம் சூடானதும், சுவையானதுமான கருத்துப் பரிமாறல்களுடன், எழுச்சியும் உணர்ச்சியும் மிக்கதாய் சுமார் 4 மணி நேரம் நடைபெற்றது.

இந்த விடயாலோசனைக் கூட்டத்தில்தான் மாநாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களுக்கான 'கரு' உருவாக்கப்பட்டது!

இனி — மதிய உணவை முடித்துக்கொண்டு, புதிய தலைவரின் தலைமையுரை நிகழ்ச்சியை அடுத்தவாரம் பார்ப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது


# மீண்டும் உங்களை மகிழ்விக்க காட்சி தருகிறது

100 நாட்களுக்குமேல் கொழும்பில் ஓடிய திரைப்படம்

2-வது ஜனத்திரள் நிறைந்த வெற்றி வாரம்

## சென்ரல் திரையில் காண உடனே முந்துங்கள்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், வரலட்சுமி, ராகவன் நடித்த

# சவாலே சமாளி

(ஈஸ்ட்மன் கலர்)

## கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு)

ஏ. வி. எம். ராஜன், ரவிச்சந்திரன், லட்சுமி, சாவித்திரி, சந்திரகலா, சோ (இரட்டை வேடம்) மனோரமா,

ஆனந்தன்



# புகுந்த வீடு

## 5ம் திகதி முதல்

ஜெமினி, ஜெயந்தி, முத்துராமன் நடித்த

# புன்னகை

ராஜா (நீர்கொழும்பு) விஜயா (மட்டுநகர்) யோகநாயகி (வல்வெட்டித்துறை)

சிவாஜிகணேசன் — வாணிஸ்ரீ —நடித்த—

# வசந்தமாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

3வது வெற்றி வாரம்

பிளாசா (வெள்ளவத்தை)

ஜெய்சங்கர் லட்சுமி முத்துராமன் நிர்மலா சந்திரபாபு —நடித்த—

# கண்ணன் வருவான்

## 5வது வாரம் செல்லமகால்

தியாகங்கள் பலவகை!
காதலுக்காக முடிதுறந்து மன்னர்களும் தியாகம் புரிந்தனர் ஆனால்! இவள் செய்த தியாகமோ எந்த ஒரு பெண்ணும்இழக் கத்துணியாததை அவள் தியாகம் செய்தாள்! ஏன்? யாருக்காக?

வின்சர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருமலை)

கே. பாலசந்தரின்

# அரங்கேற்றம்

எஸ். வி. சுப்பையா
சிவகுமார்
சசிகுமார்
ஜெமினிமகாலிங்கம்



பிரமிளா
என். எம். ராஜம்
சுந்தரிபாய்
ஜெயசித்ரா

பெரியவர்களுடன் வரும் இளையவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

3வது வாரம் கெயிட்டி

காதலித்தவனை மணக்க முடியாது கட்டியவனை கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என வாழ்ந்த ஓர் கற்புக்கரசியின் கதை.

ஜெய்சங்கர், லட்சுமி, முத்துராமன், நிர்மலா, சந்திரபாபு, விஜயலலிதா மேஜர் சுந்தரராஜன் மனோகர் நடித்த

# கண்ணன் வருவான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் செப்டம்பர் மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது